# பாடநெறி வழிகாட்டி 2026



கொழும்பு இறையியல் கல்லூரி

தேசங்களின் மறுரூபமாகுதலுக்காக திருச்சபைக்கான வளங்கள்

அட்டைப்பட கருத்தாக்கம்: அபிகேல் விக்ரமநாயக
அட்டைப்பட கலைப்படைப்பு: அகில வீரசிங்க

# கொழும்பு இறையியல் கல்லூரி

*தேசங்களின் மறுரூபமாகுதலுக்காக திருச்சபைக்கான வளங்கள்*

# பாடநெறி வழிகாட்டி 2027

## கிறிஸ்துவில் ஐக்கிய வாழ்வு

இறையியல் கல்வி என்பது ஒரு சமூக முயற்சியாகும்.

நமது ஆண்டவர் மிகப்பெரிய கட்டளையை எடுத்துரைத்தபோது, தேவனை நேசிப்பதோடு நமது அயலானையும் நேசிக்க வேண்டும் என்று வலியுறுத்தினார் (மத்தேயு 22:36-40). எனவே, நமது இறையியல் நாம் எதை விசுவாசிக்கிறோம் என்பதை மட்டுமல்லாமல், கிறிஸ்துவின் சரீரமாகிய நாம் ஒருவரோடொருவர் எவ்வாறு வாழ்கிறோம் என்பதையும் வடிவமைக்க வேண்டும்.

2027ஆம் ஆண்டிற்கான கொழும்பு இறையியல் கல்லூரியின் கருப்பொருள், நம்மையே மையமாக கொண்டு வாழ்வதற்கு அப்பால், மற்றவர்களை நம்மைவிட மேலானவர்களாக கருதவும், அவர்களுடைய வாழ்க்கையை வடிவமைக்கும் அவர்களுடைய வாழ்க்கை அனுபவங்களையும் சூழ்நிலைகளையும் கவனத்தில் கொள்ளவும் நம்மை அழைக்கிறது.

2027ஆம் ஆண்டில் கொழும்பு இறையியல் கல்லூரியில் கல்வி கற்பதில் உங்களை முழுமையாக ஈடுபடுத்திக்கொள்ளும்போது, பின்வரும் கேள்விகளை தொடர்ந்து கேட்டுக்கொள்ளுமாறு உங்களை ஊக்குவிக்கிறோம்: நான் கற்றுக்கொள்வது எவ்வாறு . . .

- எனது அயலானுடன் நான் கொண்டிருக்கும் உறவை வடிவமைக்கிறது?
- எனது திருச்சபை, குடும்பம், நட்புறவுகள், பணியிடம் மற்றும் பிற சமூகங்களில் நான் பங்கேற்கும் விதத்தை வடிவமைக்கிறது?
- தேவனுடைய இராஜ்யத்தில் வாழ்வது குறித்த எனது புரிதலை ஆழப்படுத்துகிறது?

நமது இறையியல் கல்வி, நம்மை சிறந்த இறையியல் மாணவர்களாக மட்டுமல்லாமல், தேவனுடைய மக்களாக ஒருவரோடொருவர் உண்மையுடனும் விசுவாசத்துடனும் வாழக்கூடியவர்களாக நாளுக்கு நாள் வளரச்செய்வதாக.

**கொழும்பு இறையியல் கல்லூரியானது,**
**இலங்கை தேசிய கிறிஸ்தவ சுவிசேஷ கூட்டணி (NCEASL) மற்றும்**
**இலங்கை தேசிய கிறிஸ்தவ மன்றம் (NCCSL) ஆகியவைகளில் உறுப்புரிமையும்,**
**ஆசிய இறையியல் சங்கத்தின் (ATA) கல்விக்கான அங்கீகாரமும் கொண்டது.**

# தொடர்பு கொள்வதற்கான தகவல்

| | |
|---|---|
| **பாடநெறி பதிவுகள்** | registrar@cts.lk |
| **வடகொழும்பு கல்வி நிலையம்** | nc@cts.lk |
| **கற்கைத்திட்டங்கள்** | student.services@cts.lk |
| **மாணவர் கணக்கியல்** | student.accounts@cts.lk |
| **மாணவர் புலமைப்பரிசில்கள்** | scholarships@cts.lk |
| **நூலகம்** | library@cts.lk |
| **தகவல் தொழில்நுட்பம்** | it@cts.lk |
| **பிரயோக ஊழியப்பயிற்சி** | practicums@cts.lk |
| **ஆற்றுப்பணி கற்கைத்திட்டம்** | counselling@cts.lk \| mac@cts.lk |
| **முதுமாணி கற்கைத்திட்டம்** | ma@cts.lk |
| **சிறுவர் ஊழிய களம்** | cm@cts.lk |
| **உதவி கல்விப்பீடாதிபதி**<br>திரு. ஜூலியன் தேவதாசன் | julian@cts.lk |
| **கல்விப்பீடாதிபதி**<br>அருட்திரு. ரவீன் கல்தேரா | ravin@cts.lk |

**+94 11 2890809 | www.cts.lk**

# உள்ளடக்கம்


| | *பக்கம்* |
|---|---|
| **பொதுவான தகவல்கள்** | **4** |
| **தவணை 1: தை - சித்திரை** | |
| நேர அட்டவணை - கொஹுவலை | **6** |
| நேர அட்டவணை - வடகொழும்பு | **7** |
| வாரநாள் வகுப்புக்கள் | **8–10** |
| மாலைநேர வகுப்புக்கள் | **11–12** |
| இறையியல் பட்டப்படிப்பிற்கான கருத்தரங்கு பாடநெறி | **12** |
| CTS வடகொழும்பு கல்வி நிலைய வகுப்புகள் | **13–14** |
| **தவணை 2: சித்திரை - ஆடி** | |
| நேர அட்டவணை - கொஹுவலை | **16** |
| நேர அட்டவணை - வடகொழும்பு | **17** |
| வாரநாள் வகுப்புக்கள் | **18–20** |
| மாலைநேர வகுப்புக்கள் | **21–22** |
| CTS வடகொழும்பு கல்வி நிலைய வகுப்புகள் | **23–24** |
| **தவணை 3: புரட்டாசி - மார்கழி** | |
| நேர அட்டவணை - கொஹுவலை | **26** |
| நேர அட்டவணை - வடகொழும்பு | **27** |
| வாரநாள் வகுப்புக்கள் | **28–30** |
| மாலைநேர வகுப்புக்கள் | **30–32** |
| CTS வடகொழும்பு கல்வி நிலைய வகுப்புகள் | **33–34** |
| **விரிவுரையாளர்களின் விபரங்கள்** | **35–39** |
| **CTS கற்கைத்திட்டங்கள்** | **40** |
| **சிறுவர் ஊழிய களம்** | **41–42** |

# பொதுவான தகவல்கள்

**CTS பாடநெறிகள்:**

- பொதுவாக கொழும்பு இறையியல் கல்லூரியின் பாடநெறியானது, வாரத்திற்கு ஒரு தடவையாக 13 வாரங்களில் நடாத்தப்படும்.
- குறுங்கால பாடநெறியானது, நான்கு முழுநாட்கள் அடங்கிய அதிக எதிர்பார்ப்புள்ள பாடத்திட்டமாகும்.
- சகல பாடநெறிகளும் 30 வகுப்பறை பாடவேளை மணித்தியாலங்களை கொண்டதாக அமைந்துள்ளதுடன்; சில பாடநெறிகள் 45 வகுப்பறை பாடவேளை மணித்தியாலங்களை கொண்ட பாடநெறிகளாக அல்லது 30 வகுப்பறை பாடவேளை மணித்தியாலங்களுடன் 15 மணித்தியாலங்களை கொண்ட பிரயோக ஊழியப்பயிற்சியையும் உள்ளடக்கிய பாடநெறிகளாகவும் காணப்படும்.

**பாடங்கள் கற்றுக்கொடுக்கப்படும் முறைகள்:**

- **நேர்நிலை கற்றல்:** பாடநெறிகள் கொஹுவலை மற்றும் வடகொழும்பு CTS வளாகத்தில் கற்பிக்கப்படும்.
- **நிகழ்நிலை கற்றல்:** பாடநெறிகள் Zoom வழியாக கற்பிக்கப்படும். இங்கு பாடக்குறிப்புக்களை Moodle வழியாக பெற்றுக்கொள்ளலாம். இதற்கு செயல்திறனுடைய இணைய வசதியும் டிஜிட்டல் சாதனமொன்றும் அவசியம்.
- **கலப்பு கற்றல் நிலை:** நேர்நிலை கற்றல், நிகழ்நிலை கற்றல் ஆகிய இரு முறைகளையும் உள்ளடக்கி பாடநெறிகள் கற்றுக்கொடுக்கப்படும். சில வாரங்கள் உங்கள் வகுப்புக்கள் கொஹுவலை CTS வளாகத்திலும், ஏனைய வாரங்கள் நிகழ்நிலை மூலமாகவும் நடத்தப்படும். பாடநெறியின் ஆரம்பத்திலேயே உங்கள் விரிவுரையாளர் இது குறித்த அட்டவணையை உங்களுக்கு அறிய தருவார்.

**CTS பாடநெறி கட்டணங்கள்:**

ஒரு பாடத்திற்கான அறிமுக கட்டணமானது ரூ 8,000/= ஆகும்.

* இறையியல் கல்லூரியானது மிகவும் மானிய விலையில் பாடநெறிகளை மாணவர்களுக்கு வழங்குவதற்கு, அதன் ஊழிய பங்காளர்கள் மூலம் பெற்ற தாராளமான நிதியுதவிகளே ஏதுவாக அமைகிறது. இந்நன்கொடையை CTS நன்றியுடன் ஏற்றுக்கொள்வதோடு, இந்த விசேட ஏற்பாட்டிற்கு நல்ல உக்கிராணக்காரர்களாக மாணவர்கள் இருக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றனர்.

**CTS பாடநெறிகளுக்கு பதிவு செய்வது எப்படி?**

registration.cts.lk எனும் வலைதளம் வழியாக பூர்த்தி செய்யப்பட்ட பதிவுப்படிவத்தை அனுப்பவும். உரிய பதிவுக்கட்டணங்களை எமது வலைதளத்தில் உள்ள https://www.cts.lk/payment/ என்ற கட்டணம் செலுத்தும் வலைவாசலினூடாக, நிகழ்நிலை வங்கி பணப்பரிமாற்றம், பணப்பற்று அல்லது கடன் அட்டையினூடாக செலுத்தலாம்.

***தயவு செய்து அவதானிக்கவும்:*** *உங்களது பாடத்திற்கான கட்டணம் முழுமையாக செலுத்தப்பட்ட பின்னரே வகுப்பிற்கான உங்களது ஆசனம் ஒதுக்கப்படும்.*

**முக்கிய கவனத்திற்கு:** CTS பாடநெறியொன்றிற்கு முதல் தடவையாக பதிவு செய்பவர்கள் தமது திருச்சபை போதகரின் பரிந்துரை கடிதத்துடனேயே பதிவினை மேற்கொள்ள வேண்டும்.

**பதிவு செய்யும் நாட்களும் நேரங்களும்:**

குறிப்பிட்ட தவணைக்கான பதிவு செய்யும் இறுதிநாள் அத்தவணையின் ஆரம்ப தினமாகும்.

***தவணை 1: 6-ம் திகதி தை 2027***
***தவணை 2: 26-ம் திகதி சித்திரை 2027***
***தவணை 3: 6-ம் திகதி புரட்டாசி 2027***

# துவணை 1

# 6 தை – 3 சித்திரை 2027

O நேர்நிலை கற்றல் | ◘ நிகழ்நிலை கற்றல் | ✶ கலப்பு கற்றல் நிலை

# நேர அட்டவணை: தவணை 1 (கொஹுவல)

| நேரம் | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி |
|---|---|---|---|---|---|
| காலை | O மன அதிர்ச்சியுற்ற சிறுவர்களுக்கு நம்பிக்கையூட்டலும் குணமளித்தலும்<br>மு.ப.9:00-மு.ப.11:45<br>நிவேதித்தா ஜீவபாலன் | O பிரதான இறையியல் பாரம்பரியங்களை ஆராய்தல்<br>மு.ப.9:00-பி.ப.12:45<br>ஜூலியன் தேவதாசன் | O கிறிஸ்தவ வரலாறு - III<br>மு.ப.9:00-பி.ப.12:30<br>ஜூலியன் தேவதாசன><br>ஐக்கிய வேளை<br>மு.ப.10:30-11:30 | O வேதாகம இறையியல்<br>மு.ப.9:00-பி.ப.12:30<br>சர்மிலா சுதாகர்<br>ஆராதனை வேளை<br>மு.ப.10:30-11:30 | O பன்முக சமூகத்தில் நற்செய்திப்பணி<br>மு.ப.9:00-பி.ப.12:00<br>இரா. ஹரிஹரன் |
| பிற்பகல் | | O பழைய ஏற்பாட்டை அறிந்துகொள்ளுதல்<br>பி.ப.3:00-பி.ப.5:30<br>வனஜா ராஜ்குமார் | ✶ தொழில்சார் அறநெறி<br>பி.ப.3:00-பி.ப.5:20<br>கே. யாபேஸ் | O ஆவிக்குரிய வரங்கள்<br>பி.ப.3:00-பி.ப.5:30<br>காமினி ஜயந்த | |
| மாலை | ◘ நீதிமொழிகள்<br>பி.ப.6:00-பி.ப.8:45<br>யொஹான் கிருஷ்ணகுமார் | ◘ விடுதலை மற்றும் சமத்துவம் தொடர்பான பிரச்சினைகள்<br>பி.ப.6:00-பி.ப.8:30<br>கிறிஸ்டி சாமுவேல் | O உங்களுக்குள் இருக்கும் தலைமைத்துவத்தை வளர்த்தெடுத்தல்<br>பி.ப.6:00-பி.ப.8:20<br>சந்ரசேகரம் ரொஷான் க்ளவன்ஸ் | O வேதாகம விளக்கவுரை<br>பி.ப.6:00-பி.ப.8:30<br>கிறிஸ்துமணி செல்லையா | O இஸ்ரவேலரின் வரலாறு<br>பி.ப.6:00-பி.ப.9:00<br>தனராஜ் அஜேந்திரன் |

முக்கிய குறிப்பு: குறிப்பிடப்பட்டுள்ள பாடநெறிகள் தவிர்க்க முடியாத காரணங்களினிமித்தம் மாற்றமடையலாம் என்பதை கவனத்தில் கொண்டு பதிவு செய்வதற்கு முன்னர் கல்விசார் காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.

# நேர அட்டவணை: தவணை 1 (வடகொழும்பு)

| நேரம் | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி |
|---|---|---|---|---|---|
| காலை | | **பிலிப்பியர் நிருபத்தை கற்பித்தல் மற்றும் பிரசங்கித்தல்**<br>மு.ப.9:00-மு.ப.11:30<br>சர்மிலா சுதாகர் | **மேய்ப்பத்துவ பராமரிப்பு**<br>மு.ப.9:00-மு.ப.11:30<br>கே. யாபேஸ் | | |
| மாலை | | **Leadership**<br>6:00pm–8:30pm<br>*Ivor Poobalan* | **බයිබලයට අනුකූල යාච්ඤාව ඉගෙනීම**<br>ප.ව.5:40-ප.ව.8:00<br>ශානක ප්‍රනාන්දු | **கிறிஸ்தவ கண்ணோட்டத்தில் திருமணம்**<br>பி.ப.3:00-பி.ப.5:30<br>வி. கிறிஷாந்தி சந்ரசேகர் | |
| | | **ஆற்றுப்பணிக்கான அறிமுகம்**<br>பி.ப.5:30-பி.ப.8:00<br>கிறிஸ்ரி பாலேந்திரன் | **ஏசாயா**<br>பி.ப.5:40-பி.ப.8:00<br>காமினி ஜயந்த | | |



முக்கிய குறிப்பு: குறிப்பிடப்பட்டுள்ள பாடநெறிகள் தவிர்க்க முடியாத காரணங்களினிமித்தம் மாற்றமடையலாம் என்பதை கவனத்தில் கொண்டு பதிவு செய்வதற்கு முன்னர் கல்விசார் காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.

# வாரநாள் வகுப்புகள்

## நேர்நிலை கற்றல்

### மன அதிர்ச்சியுற்ற சிறுவர்களுக்கு நம்பிக்கையூட்டலும் குணமளித்தலும்

விருப்பு

உடல், பாலியல், உள மற்றும் உணர்ச்சி ரீதியான துஷ்பிரயோகங்களால் மன அதிர்ச்சிக்குள்ளான சிறுவர்களின் நிலையினை இப்பாடநெறியானது விளக்குகிறது. மேலும், மன அதிர்ச்சியுற்ற சிறுவர்களுக்கு நம்பிக்கையூட்டி குணமளிக்கும் வேதாகம மற்றும் நடைமுறை ஊழியத்தினை செய்வதற்கு இப்பாடநெறிக்கூடாக மாணவர்கள் தயார்படுத்தப்படுகிறார்கள்.

11 வாரங்கள்

நாள்: திங்கள்

நேரம்: மு.ப.9:00-11:45

ஆரம்பம்: தை 11

திறமை அளவு: 2

விரிவுரையாளர்:
**நிவேதித்தா ஜீவபாலன்**

### பழைய ஏற்பாட்டை அறிந்துகொள்ளுதல்

விருப்பு

பழைய ஏற்பாட்டின் வரலாறு, பண்பாடு மற்றும் இறையியல் கருப்பொருள்களை இப்பாடநெறி ஆழமாக ஆராய்கிறது. இஸ்ரவேலரின் பயணம் மற்றும் வேதாகம இலக்கிய நடைகளை கற்று பழைய ஏற்பாடு எவ்வாறு புதிய ஏற்பாட்டிற்கும் கிறிஸ்தவ வாழ்விற்கும் அடித்தளமாக அமைகிறது என்பதை மாணவர்கள் இப்பாடநெறிக்கூடாக பரிந்துகொள்வர்.

12 வாரங்கள்

நாள்: செவ்வாய்

நேரம்: பி.ப.3:00-5:30

ஆரம்பம்: தை 12

திறமை அளவு: 2

விரிவுரையாளர்:
**வனஜா ராஜ்குமார்**

### கிறிஸ்தவ வரலாறு - III

**(19-ம், 20-ம் நூற்றாண்டுகள்)**

கட்டாயம்

1800ஆம் ஆண்டு முதல் இன்று வரையிலான காலப்பகுதியில் திருச்சபையின் செயற்பாடுகளையும் வளர்ச்சியையும் இப்பாடநெறி ஆராய்கிறது. மேலும், சரித்திரத்தில் திருச்சபை கண்ட வெற்றிகள், சவால்கள் மற்றும் தேவனின் செயற்பாடுகளை புரிந்துகொண்டு ஆவிக்குரிய பாடங்களை கற்றுக்கொள்வதற்கு மாணவர்களுக்கு உதவுகிறது.

12 வாரங்கள்

நாள்: புதன்

நேரம்: மு.ப.9:00-பி.ப.12:30

ஆரம்பம்: தை 13

திறமை அளவு: 2

விரிவுரையாளர்:
**ஜூலியன் தேவதாசன்**

# வாரநாள் வகுப்புகள்

## நேர்நிலை கற்றல்

### வேதாகம இறையியல்

பழைய மற்றும் புதிய ஏற்பாடுகளின் முக்கிய இறையியல் போதனைகளை இப்பாடநெறி உள்ளடக்கியுள்ளது. தேவன் யார் என்பதையும், சிருஷ்டிப்பிலும், புதிய சிருஷ்டிப்பிலும் அவர் தம்முடைய மீட்பின் திட்டத்தை எவ்வாறு வெளிப்படுத்துகின்றார் என்பதையும் குறித்தும் ஆழமாக அறிவதற்கு இப்பாடநெறியானது வழிகாட்டுகிறது.

**கட்டாயம்**

12 வாரங்கள்

நாள்: வியாழன்

நேரம்: மு.ப.9:00-பி.ப.12:30

ஆரம்பம்: தை 7

திறமை அளவு: 2

விரிவுரையாளர்:
**சர்மிலா சுதாகர்**

### ஆவிக்குரிய வரங்கள்

ஆவிக்குரிய வரங்களை குறித்த வேதாகம சத்தியங்கள், விளக்கங்கள் மற்றும் அவற்றின் பிரயோகங்களை இப்பாடநெறி ஆராய்கிறது. உங்கள் தனிப்பட்ட ஆவிக்குரிய வரங்களை அடையாளம் கண்டு, கிறிஸ்துவிற்காக வல்லமையுடன் பணியாற்றி பிரகாசிப்பதற்கு இப்பாடநெறியானது உதவி செய்கிறது.

**விருப்பு**

12 வாரங்கள்

நாள்: வியாழன்

நேரம்: பி.ப.3:00-5:30

ஆரம்பம்: தை 7

திறமை அளவு: 2

விரிவுரையாளர்:
**காமினி ஜயந்த**

### பன்முக சமூகத்தில் நற்செய்திப்பணி

பன்முக சமய மற்றும் கலாச்சார சூழலில் கிறிஸ்துவின் நற்செய்தியை பகிர்வதற்கான வழிகளை இப்பாடநெறி ஆராய்கிறது. சுவிசேஷத்தின் இதயத்துடிப்பை உணர்ந்து உங்கள் செல்வாக்கிற்கு உட்பட்ட வட்டாரங்களில் கிறிஸ்துவின் நற்செய்தியை தாக்கமுள்ள விதத்தில் அறிவிப்பதற்கு உங்களை ஆயத்தப்படுத்தும்.

**கட்டாயம்**

10 வாரங்கள்

நாள்: வெள்ளி

நேரம்: மு.ப.9:00-பி.ப.12:00

ஆரம்பம்: தை 8

திறமை அளவு: 2

விரிவுரையாளர்:
**இரா. ஹரிஹரன்**

தவணை 1 | 6 தை – 3 சித்திரை 2027

# வாரநாள் வகுப்புகள்

## கலப்பு கற்றல் நிலை

### தொழில்சார் அறநெறி

விருப்பு

பணித்தளத்திலும் வியாபாரத்திலும் ஒரு கிறிஸ்தவன் எவ்வாறு வேதாகம அறநெறிகளின் அடிப்படையில் செயற்பட வேண்டும் என்பதை இப்பாடநெறியானது விளக்குகிறது. தொழில் தேர்வு, தொழிற்சங்க நடவடிக்கைகள் மற்றும் பணித்தள அழுத்தங்களை கையாள்வது குறித்தான வழிகாட்டலை இப்பாடநெறியானது வழங்குகிறது.

13 வாரங்கள்

நாள்: புதன்

நேரம்: பி.ப.3:00-5:20

ஆரம்பம்: தை 6

திறமை அளவு: 2

விரிவுரையாளர்: **கே. யாபேஸ்**

தவணை 1 | 6 தை – 3 சித்திரை 2027

# மாலைநேர வகுப்புகள்

## நேர்நிலை கற்றல்

### உங்களுக்குள் இருக்கும் தலைமைத்துவத்தை வளர்த்தெடுத்தல்

விருப்பு

ஒவ்வொருவருக்குள்ளும் மறைந்திருக்கும் தலைமைத்துவ திறன்களை அடையாளம் கண்டு வளர்த்தெடுப்பதற்கு இப்பாடநெறி உதவுகிறது. தலைமைத்துவ பண்புகள், தரிசனம், ஒழுக்கம், சவால்கள் மற்றும் முரண்பாடுகளை கையாளும் முறைகளை கற்பித்து திறமையான தலைவராக மிளர செய்வதற்கு இப்பாடநெறியானது வழிகாட்டுகிறது.

13 வாரங்கள்

நாள்: புதன்

நேரம்: பி.ப.6:00-8:20

ஆரம்பம்: தை 6

திறமை அளவு: 2

விரிவுரையாளர்: **சந்ரசேகரம் ரொஷான் க்ளவன்ஸ்**

தவணை 1 | 6 தை – 3 சித்திரை 2027

# மாலைநேர வகுப்புகள்

## நேர்நிலை கற்றல்

### வேதாகம விளக்கவுரை

கட்டாயம்

ஒவ்வொரு சந்ததியிற்கும் நிரந்தரமான தேவனின் சத்திய வார்த்தையான வேதாகமத்தை சரியான விதத்தில் கையாள்வதற்கான நெறிமுறைகளை இப்பாடநெறி பயிற்றுவிக்கிறது. வேதாகமத்தில் உள்ள கவிதை, தீர்க்கதரிசனம், சரித்திரம் மற்றும் நியாயப்பிரமாணம் போன்ற பல்வேறு இலக்கிய நடைகளை புரிந்து கொள்வதற்கான கோட்பாடுகளை இப்பாடநெறியானது மாணவர்களுக்கு கற்றுக்கொடுக்கிறது.

12 வாரங்கள்

நாள்: வியாழன்

நேரம்: பி.ப.6:00-8:30

ஆரம்பம்: தை 7

திறமை அளவு: 2

விரிவுரையாளர்:
**கிறிஸ்துமணி செல்லையா**

### இஸ்ரவேலரின் வரலாறு

விருப்பு

பழைய ஏற்பாட்டின் வரலாற்று பின்னணியான இஸ்ரவேலின் சரித்திரத்தை ஆபிரகாம் காலம் முதல் பார் கோக்பா கலவரம் வரை இப்பாடநெறி அறிமுகப்படுத்துகிறது. யூத வரலாற்றின் பின்னணியில் வேதாகமத்தை ஆழமாக புரிந்து கொள்ள இப்பாடநெறியானது மாணவர்களுக்கு உதவி செய்கிறது.

10 வாரங்கள்

நாள்: வெள்ளி

நேரம்: பி.ப.6:00-9:00

ஆரம்பம்: தை 8

திறமை அளவு: 2

விரிவுரையாளர்:
**தனராஜ் அஜேந்திரன்**

## நிகழ்நிலை கற்றல்

### நீதிமொழிகள்

விருப்பு

இஸ்ரவேலரின் பெறுமதி வாய்ந்த ஞான பாரம்பரியத்தை பாதுகாத்து வழங்கும் நீதிமொழிகள் நூலின் பின்னணியை இப்பாடநெறி விளக்குகிறது. முழு நூலினதும் பின்னணியை ஆழமாக புரிந்து கொண்டு வாசிக்கும்போது, நீதிமொழிகளின் பெறுமதியை உணரவும், அவற்றை வாழ்வில் பிரயோகிக்கவும் கூடுமானதாயிருக்கும். வேதாகம ஞானத்தை உணர்ந்து, அதனை அன்றாட வாழ்க்கையில் நடைமுறைப்படுத்த மாணவர்களுக்கு இப்பாடநெறியானது வழிகாட்டுகிறது.

11 வாரங்கள்

நாள்: திங்கள்

நேரம்: பி.ப.6:00-8:45

ஆரம்பம்: தை 11

திறமை அளவு: 2

விரிவுரையாளர்:
**யொஹான் கிருஷ்ணகுமார்**

துவணை 1 | 6 தை – 3 சித்திரை 2027

# மாலைநேர வகுப்புகள்

## நிகழ்நிலை கற்றல்

### விடுதலை மற்றும் சமத்துவம் தொடர்பான பிரச்சினைகள்

விருப்பு

சமகால சமூதாயத்தில் நீதி, சமாதானம் மற்றும் மனித உரிமைகள் குறித்தான வேதாகம இறையியல் கண்ணோட்டங்களை இப்பாடநெறி ஆராய்கிறது. வேதாகம நீதியின் அடிப்படையில் வறுமை, முரண்பாடுகள் விமர்சன ரீதியாக பகுப்பாய்வு செய்து சமூதாயத்தில் சமாதானத்தையும் நேர்மறை மாற்றத்தையும் உருவாக்குவதற்கான தீர்வுகளை இப்பாடநெறி முன்வைக்கிறது.

12 வாரங்கள்

நாள்: செவ்வாய்

நேரம்: பி.ப.6:00-8:30

ஆரம்பம்: தை 12

திறமை அளவு: 2

விரிவுரையாளர்:
**கிறிஸ்டி சாமுவேல்**

துவணை 1 | 6 தை – 3 சித்திரை 2027

# இறையியல் பட்டப்படிப்பிற்கான கருத்தரங்கு பாடநெறி

## நேர்நிலை கற்றல்

இக்கருத்தரங்குகளுக்கு பதிவு செய்வதற்கு நீங்கள் இளமாணி அல்லது முதுமாணி பட்டப்படிப்பின் மாணவராக பதிவு செய்திருக்க வேண்டும். அல்லது அதற்கு சமமான/ அதற்கு மேலான பட்டத்தை பெற்றவராகவோ இருத்தல் வேண்டும்.

இறையியல் இளமாணி பட்டத்திற்கு பதிவு செய்தவர், ஆகக்குறைந்தது 60 திறமை அளவினை பூர்த்தி செய்த மாணவராக இருத்தல் வேண்டும்.

### பிரதான இறையியல் பாரம்பரியங்களை ஆராய்தல்

கட்டாயம்

கிறிஸ்தவ வரலாற்றில் தோற்றம் பெற்ற பல்வேறு இறையியல் கோட்பாடுகளின் தோற்றம், பின்னணி, வளர்ச்சி, அதன் இறையியலாளர்கள் மற்றும் சமூகத்தில் ஏற்படுத்திய தாக்கங்களை இப்பாடநெறி ஆராய்கிறது. இவ்வுட்பிரிவுகளின் இறையியல் அடிப்படைகளை புரிந்துகொண்டு, இன்றைய திருச்சபையில் அவை ஏற்படுத்தும் பலம் மற்றும் பலவீனங்களை மதிப்பிடுவதற்கு இப்பாடநெறியானது மாணவர்களுக்கு உதவி செய்கிறது.

12 வாரங்கள்

நாள்: செவ்வாய்

நேரம்: மு.ப.9:00-பி.ப.12:45

ஆரம்பம்: தை 12

திறமை அளவு: 3

விரிவுரையாளர்:
**ஜூலியன் தேவதாசன்**

# CTS வடகொழும்பு கல்வி நிலைய வகுப்புகள்

## நேர்நிலை கற்றல்

### பிலிப்பியர் நிருபத்தை கற்பித்தல் மற்றும் பிரசங்கித்தல்

விருப்பு

வீட்டுக்காவலில் இருந்தபோதிலும் பவுல் பிலிப்பியர் திருச்சபைக்கு எழுதிய மகிழ்ச்சியும் நன்றியும் நிறைந்த குறுகிய நிருபத்தை இப்பாடநெறியானது ஆழமாக ஆராய்கிறது. கிறிஸ்துவில் காணப்படும் பாதுகாப்பு, ஒற்றுமை மற்றும் மனநிறைவை வெளிப்படுத்தும் இந்நிருபத்தை திருச்சபைக்கு போதிக்கவும், பிரசங்கிக்கவும் இப்பாடநெறியானது வழிகாட்டுகிறது.

12 வாரங்கள்

நாள்: செவ்வாய்

நேரம்: மு.ப.9:00-11:30

ஆரம்பம்: தை 12

திறமை அளவு: 2

விரிவுரையாளர்:
**சர்மிலா சுதாகர்**

### மேய்ப்பத்துவ பராமரிப்பு

விருப்பு

தேவனுடைய ஜனங்களுக்கு மேயப்பத்துவ பராமரிப்பு அளிப்பதன் வேதாகம முக்கியத்துவத்தை இப்பாடநெறியானது விளக்குகிறது. ஆவிக்குரிய போஷிப்பு, வீட்டு சந்திப்பு, ஒழுக்க நடவடிக்கை, ஞானஸ்நானம், திருமணம் மற்றும் மரணச்சடங்கு போன்ற நடைமுறை பணிகளை திறம்பட செய்வதற்கான வேதாகம வழிகாட்டலை தலைவர்களுக்கு இப்பாடநெறியானது வழங்குகிறது.

12 வாரங்கள்

நாள்: புதன்

நேரம்: மு.ப.9:00-11:30

ஆரம்பம்: தை 13

திறமை அளவு: 2

விரிவுரையாளர்:
**கே. யாபேஸ்**

### கிறிஸ்தவ கண்ணோட்டத்தில் திருமணம்

விருப்பு

திருமண வாழ்வு குறித்த வேதாகம கண்ணோட்டத்தையும், அதிலுள்ள பொறுப்புகள் மற்றும் உறவுமுறைகளை இப்பாடநெறி ஆராய்கிறது. நிதி நிர்வாகம், பிள்ளைப்பேறின்மை, நம்பிக்கைத்துரோகம் மற்றும் விவாகரத்து போன்ற, தம்பதியினர் எதிர்கொள்ளும் நடைமுறை சவால்களை வெற்றிகரமாக எதிர்கொள்வதற்கு இப்பாடநெறி உதவுகிறது.

12 வாரங்கள்

நாள்: வியாழன்

நேரம்: பி.ப.3:00-5:30

ஆரம்பம்: தை 7

திறமை அளவு: 2

விரிவுரையாளர்:
**வி. கிறிஷாந்தி சந்ரசேகர்**

# CTS வடகொழும்பு கல்வி நிலைய வகுப்புகள்

## நேர்நிலை கற்றல்

### ஆற்றுப்பணிக்கான அறிமுகம்

மனக்காயம், மனச்சிதைவு, துஷ்பிரயோகம் போன்ற உடல், உள, உணர்வு ரீதியாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவது கிறிஸ்தவர்களின் முக்கிய பொறுப்பாகும். ஆற்றுப்பணிக்கான வேதாகம அடிப்படைகளையும் நடைமுறை அறிவையும் வழங்கி அப்பணிக்கு மாணவர்களை ஆயத்தப்படுத்துவதே இப்பாடநெறியின் முக்கிய நோக்கமாகும்.

**கட்டாயம்**

12 வாரங்கள்

நாள்: செவ்வாய்

நேரம்: பி.ப.5:30-8:00

ஆரம்பம்: தை 12

திறமை அளவு: 2

விரிவுரையாளர்:
**கிறிஸ்ரி பாலேந்திரன்**

### ஏசாயா

ஏசாயா தீர்க்கதரிசியின் சரித்திரப்பின்னணி, அவரது செய்தி மற்றும் அதன் தற்காலத்திற்கான பிரயோகம் போன்றவற்றை இப்பாடநெறி ஆராய்கிறது. இதன் மூலமாக தேவனின் மகத்துவம், மேசியாவை குறித்த தீர்க்கதரிசனங்கள், தேவனின் இரட்சிப்பின் திட்டங்கள் பற்றிய ஆழமான புரிதலை பெறுவதோடு அவற்றை தற்கால வாழ்வியலோடு இணைத்து புரிந்துகொள்வதற்கு மாணவர்களுக்கு வழிகாட்டுகிறது.

**விருப்பு**

13 வாரங்கள்

நாள்: புதன்

நேரம்: பி.ப.5:40-8:00

ஆரம்பம்: தை 6

திறமை அளவு: 2

விரிவுரையாளர்:
**காமினி ஜயந்த**

# துவணை 2

## 26 சித்திரை – 31 ஆடி 2027

# நேர அட்டவணை: தவணை 2 (கொஹுவல)

| நேரம் | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி |
|---|---|---|---|---|---|
| காலை | ○ எசேக்கியல்<br>மு.ப.9:00-மு.ப.11:30<br>ஞா. ஸ்டன்லி நெல்சன் | ○ ஞான இலக்கியங்களுக்கான அறிமுகம்<br>மு.ப.9:00-மு.ப.11:20<br>வனஜா ராஜ்குமார் | ○ பரிசுத்த ஆவியானவரின் ஆட்தத்துவமும் செயற்பாடும்<br>மு.ப.9:00-பி.ப.12:30<br>ஜூலியன் தேவதாசன்<br>ஐக்கிய வேளை<br>மு.ப.10:30-11:30 | ○ பரிபூரணமான சிறுவர் அபிவிருத்தி<br>மு.ப.9:00-பி.ப.12:30<br>வனஜா ராஜ்குமார்<br>ஆராதனை வேளை<br>மு.ப.10:30-11:30 | ○ ரோமருக்கு எழுதிய நிருபம்<br>மு.ப.9:00-மு.ப.11:30<br>சர்மிலா சுதாகர் |
| பிற்பகல் | ✶ வழிபாடு பற்றிய இறையியல்<br>பி.ப.3:00-பி.ப.5:20<br>யொஹான் கிருஷ்ணகுமார் | ○ தலைமைத்துவம்<br>பி.ப.3:00-பி.ப.5:20<br>இரா. ஹரிஹரன் | ✶ கலாச்சார மானுடவியல்<br>பி.ப.3:00-பி.ப.5:30<br>கே. யாபேஸ் | ○ திருமணத்திற்கு தயாராவோருக்கான உதவி ஆலோசனைகள்<br>பி.ப.3:00-பி.ப.5:30<br>வி. கிறிஷாந்தி சந்ரசேகர் | |
| மாலை | □ மேய்ப்பத்துவ பராமரிப்பும் உளவியலும்<br>பி.ப.6:00-பி.ப.8:20<br>நிவேதித்தா ஜீவபாலன் | ○ 1 மற்றும் 2 பேதுரு<br>பி.ப.6:00-பி.ப.8:20<br>ஜோன் பெனடிக்ட் | ○ வாலிபர் ஊழியம்<br>பி.ப.6:00-பி.ப.8:30<br>மோகன் இதயகுமார் அழகக்கோன் | ○ திருச்சபை நிறுவுதல்<br>பி.ப.6:00-பி.ப.8:30<br>கிறிஸ்துமணி செல்லையா | □ வேதாகமத்திலுள்ள மகத்தான பெண் கதாபாத்திரங்கள்<br>பி.ப.6:00-பி.ப.8:30<br>நிரஞ்ஜனி இராஜரட்ணம் |

முக்கிய குறிப்பு: குறிப்பிடப்பட்டுள்ள பாடநெறிகள் தவிர்க்க முடியாத காரணங்களினிமித்தம் மாற்றமடையலாம் என்பதை கவனத்தில் கொண்டு பதிவு செய்வதற்கு முன்னர் கல்விசார் காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.

# நேர அட்டவணை: தவணை 2 (வடகொழும்பு)

| நேரம் | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி |
|---|---|---|---|---|---|
| காலை | | **கிறிஸ்தவ நியாயவாதம்**<br>மு.ப.9:00-மு.ப.11:20<br>ஜூலியன் தேவதாசன் | **கிறிஸ்தவ உக்கிராணத்துவம்**<br>மு.ப.9:00-மு.ப.11:30<br>கிறிஸ்துமணி செல்லையா | | |
| மாலை | | **The Final Destination: Heaven and Hell in Bible and Theology**<br>6:00pm–8:20pm<br>*Nathanael Somanathan* | **නායකත්වයට මඟ: 1 සහ 2 තිමෝති**<br>ප.ව.5:30-ප.ව.8:00<br>ලසිත් රාජකරුණා | **கிறிஸ்தவ பிள்ளை வளர்ப்பும் குடும்ப வாழ்வும்**<br>பி.ப.3:00-பி.ப.5:30<br>இரா. ஹரிஹரன் | |
| | | **பஞ்சாகமம்**<br>பி.ப.5:40-பி.ப.8:00<br>தனராஜ் அஜேந்திரன் | **இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கை**<br>பி.ப.5:30-பி.ப.8:00<br>காமினி ஜயந்த | | |

முக்கிய குறிப்பு: குறிப்பிடப்பட்டுள்ள பாடநெறிகள் தவிர்க்க முடியாத காரணங்களினிமித்தம் மாற்றமடையலாம் என்பதை கவனத்தில் கொண்டு பதிவு செய்வதற்கு முன்னர் கல்விசார் காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.

# வாரநாள் வகுப்புகள்

## நேர்நிலை கற்றல்

### எசேக்கியல்

**தேவ பிரசன்னத்தின் ஒளியில் வாழுதல்**

விருப்பு

நாட்டின் வீழ்ச்சி, நாடுகடத்தப்பட்ட சூழல் போன்ற துண்பமான காலங்களில் எசேக்கியல் தீர்க்கதரிசி மூலமாக வெளிப்பட்ட தேவ வார்த்தையை இப்பாடநெறியானது ஆராய்கிறது. இதன் மூலமாக நியாயத்தீர்ப்பிற்கு மத்தியிலும் தம் மக்களை மீட்டெடுத்து உணர்த்தும் தேவனின் வாக்குத்தத்தங்களையும் கிறிஸ்துவில் அடங்கும் அவற்றின் நிறைவேறுதலையும் மாணவர்கள் அறிந்து கொள்ளலாம்.

12 வாரங்கள்

நாள்: திங்கள்

நேரம்: மு.ப.9:00-11:30

ஆரம்பம்: வைகாசி 3

திறமை அளவு: 2

விரிவுரையாளர்:
**ஞா. ஸ்டன்லி நெல்சன்**

### ஞான இலக்கியங்களுக்கான அறிமுகம்

விருப்பு

இப்பாடநெறியில் யோபு, சங்கீதம், நீதிமொழிகள், பிரசங்கி, உன்னதப்பாட்டு ஆகிய கவிதை, ஞான இலக்கிய நூல்களை அறிமுகம் செய்கிறது. குறிப்பாக உன்னதப்பாட்டின் இலக்கிய அழகினையும், யோபு நூலின் ஆழமான இறையியல் கருத்துக்களையும் புரிந்துகொள்வதற்கு இப்பாடநெறியானது மாணவர்களுக்கு உதவி செய்கிறது.

13 வாரங்கள்

நாள்: செவ்வாய்

நேரம்: மு.ப.9:00-11:20

ஆரம்பம்: சித்திரை 27

திறமை அளவு: 2

விரிவுரையாளர்:
**வனஜா ராஜ்குமார்**

### தலைமைத்துவம்

கட்டாயம்

வேதாகம அடிப்படையிலான தலைமைத்துவ கோட்பாடுகளை இனங்கண்டு கொள்ள இப்பாடநெறியானது உதவுகிறது. இதன் மூலமாக தலைமைத்துவ பண்புகளை வளர்த்து ஊழியம், அலுவலகம் மற்றும் குடும்ப சூழல்களில் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய சிறந்த தலைவராக மிளிர்வதற்கு இப்பாடநெறியில் கற்கிற மாணவர்களை ஆயத்தப்படுத்துகிறது.

13 வாரங்கள்

நாள்: செவ்வாய்

நேரம்: பி.ப.3:00-5:20

ஆரம்பம்: சித்திரை 27

திறமை அளவு: 2

விரிவுரையாளர்:
**இரா. ஹரிஹரன்**

# வாரநாள் வகுப்புகள்

## நேர்நிலை கற்றல்

### பரிசுத்த ஆவியானவரின் ஆட்தத்துவமும் செயற்பாடும்

வேதாகமத்தில் பரிசுத்த ஆவியானவர் குறித்தும், வரலாற்று ரீதியாக ஆவியானவர் பற்றிய கோட்பாடுகள் எவ்வாறு வளர்ச்சியடைந்தன என்பதையும் இப்பாடநெறி விளக்குகிறது. மேலும் விசுவாசியின் வாழ்விலும் திருச்சபையிலும் ஆவியானவரின் தனித்துவமான செயற்பாட்டையும் வல்லமையுள்ள பிரசன்னத்தையும் புரிந்துகொள்வதற்கு இப்பாடநெறியானது மாணவர்களுக்கு வழிகாட்டுகிறது.

**கட்டாயம்**

12 வாரங்கள்

நாள்: புதன்

நேரம்: மு.ப.9:00-பி.ப.12:30

ஆரம்பம்: சித்திரை 28

திறமை அளவு: 2

விரிவுரையாளர்:
**ஜூலியன் தேவதாசன்**

### பரிபூரணமான சிறுவர் அபிவிருத்தி

வேதாகம கோட்பாடுகளின் அடிப்படையில் சிறுவர்களின் மனோதத்துவ நிலையையும் ஆரோக்கியமான வளர்ச்சியையும் புரிந்துகொள்வதற்கு இப்பாடநெறியானது வழிகாட்டுகிறது. மேலும் சிறுவரின் மேம்பாட்டிற்கான தரிசனத்தையும் பயிற்சிகளையும் பெற்று, அவர்களை திருச்சபையிலும் தேசத்திலும் ஆசீர்வாதமாக தலைமுறையாக உருவாக்க இப்பாடநெறியானது உதவி செய்கிறது.

**விருப்பு**

12 வாரங்கள்

நாள்: வியாழன்

நேரம்: மு.ப.9:00-பி.ப.12:30

ஆரம்பம்: சித்திரை 29

திறமை அளவு: 2

விரிவுரையாளர்:
**வனஜா ராஜ்குமார்**

### திருமணத்திற்கு தயாராவோருக்கான உதவி ஆலோசனைகள்

தற்கால குடும்ப அழுத்தங்கள் மற்றும் சவால்களுக்கு மத்தியில் உறுதியான கிறிஸ்தவ திருமண வாழ்வை கட்டியெழுப்புவதற்கு இப்பாடநெறியானது வழிகாட்டுகிறது. திருமணத்திற்கு ஆயத்தமாவோருக்கு உதவவும், அவர்களுக்கு தேவையான ஆலோசனைகளை வழங்கி பயிற்சியளிக்க விரும்புவோருக்கும் இப்பாடநெறி உதவியாக அமைகிறது.

**விருப்பு**

12 வாரங்கள்

நாள்: வியாழன்

நேரம்: பி.ப.3:00-5:30

ஆரம்பம்: சித்திரை 29

திறமை அளவு: 2

விரிவுரையாளர்:
**வி. கிறிஷாந்தி சந்ரசேகர்**

# வாரநாள் வகுப்புகள்

## நேர்நிலை கற்றல்

### ரோமருக்கு எழுதிய நிருபம்

கட்டாயம்

ரோமருக்கு எழுதிய நிருபம் அகஸ்டீன், மார்ட்டின் லூத்தர், ஜோன் வெஸ்லி, கார்ள் பார்த் போன்றவர்களின் வாழ்க்கையில் ஆழமான மாற்றங்களை உருவாக்கியது. இத்தகைய வரலாற்று சிறப்புமிக்க நிருபத்தின் வழியே தேவனின் மீட்புத்திட்டம், சிலுவையின் நீதி, தேவ அன்பினை புரிந்துகொண்டு நமது அன்றாட வாழ்வை அர்த்தமுள்ளதாக வாழ்வதற்கு இப்பாடநெறியானது உதவி செய்கிறது.

12 வாரங்கள்

நாள்: வெள்ளி

நேரம்: மு.ப.9:00-11:30

ஆரம்பம்: சித்திரை 30

திறமை அளவு: 2

விரிவுரையாளர்:
**சர்மிலா சுதாகர்**

## கலப்பு கற்றல் நிலை

### வழிபாடு பற்றிய இறையியல்

கட்டாயம்

இப்பாடநெறியானது பழைய மற்றும் புதிய ஏற்பாடுகளின் பின்னணியில் வேதாகம அடிப்படையிலான ஆராதனை முறைகளை ஆராய்வதோடு, அதன் அடிப்படையில் ஆராதனை இறையியலை புரிந்துகொண்டு வேதாகம கோட்பாடுகளின்படி திருச்சபை ஆராதனையை மதிப்பீடு செய்வதற்கு உதவி செய்கிறது.

13 வாரங்கள்

நாள்: திங்கள்

நேரம்: பி.ப.3:00-5:20

ஆரம்பம்: சித்திரை 26

திறமை அளவு: 2

விரிவுரையாளர்:
**யொஹான் கிருஷ்ணகுமார்**

### கலாச்சார மானுடவியல்

விருப்பு

இப்பாடநெறியானது மனித சமூகங்களின் கலாச்சார கருத்துக்களையும் அதன் துணை அமைப்புகளையும் விரிவாக ஆராய்கிறது. கலாச்சாரம் எவ்வாறு திருச்சபை, நற்செய்திப்பணி மற்றும் கிறிஸ்தவ ஊழியத்தோடு தொடர்புறுகிறது என்பதை புரிந்துகொள்வதற்கு வழிகாட்டுகிறது.

12 வாரங்கள்

நாள்: புதன்

நேரம்: பி.ப.3:00-5:30

ஆரம்பம்: சித்திரை 28

திறமை அளவு: 2

விரிவுரையாளர்:
**கே. யாபேஸ்**

# மாலைநேர வகுப்புகள்

## நேர்நிலை கற்றல்

### 1 மற்றும் 2 பேதுரு

துன்புறுத்தல் மற்றும் தவறான போதனைகள் நிறைந்த சூழலில் திருச்சபையை உண்மையுள்ளதாக பலப்படுத்துவதை பேதுருவின் நிருபங்கள் விளக்குகின்றன. சவால்களுக்கு மத்தியில் விசுவாசத்தை காத்து திருச்சபையை திறம்பட வழிநடத்த இப்பாடநெறி உதவி செய்கிறது.

விருப்பு

13 வாரங்கள்

நாள்: செவ்வாய்

நேரம்: பி.ப.6:00-8:20

ஆரம்பம்: சித்திரை 27

திறமை அளவு: 2

விரிவுரையாளர்:
**ஜோன் பெனடிக்ட்**

### வாலிபர் ஊழியம்

உலகமயமாக்கல் சூழலில் வாலிபர்கள் எதிர்கொள்ளும் சவால்களையும் அவர்களின் ஆற்றல்களையும் இப்பாடநெறி மையப்படுத்துகிறது. 14 முதல் 21 வயதுடைய வாலிபர்கள் மத்தியில் நற்செய்தியை அறிவித்து, அவர்களை சீஷத்துவ பாதையில் வழிநடத்தி, அவர்களின் ஆற்றலை சமூதாய மாற்றத்திற்கு பயன்படுத்துவதற்கு மாணவர்களை தயார்படுத்துகிறது.

விருப்பு

12 வாரங்கள்

நாள்: புதன்

நேரம்: பி.ப.6:00-8:30

ஆரம்பம்: சித்திரை 28

திறமை அளவு: 2

விரிவுரையாளர்: **மோகன் இதயகுமார் அழகக்கோன்**

### திருச்சபை நிறுவுதல்

புதிய திருச்சபைகளை தொடங்குவதற்கான நடைமுறை அணுகுமுறைகளையும் பாரம்பரிய முறைகளின் கலாச்சார மதிப்பீட்டினையும் இப்பாடநெறியானது ஆராய்கிறது. தற்கால சூழலுக்கு பொருத்தமான பலமுள்ள, ஆரோக்கியமான விசுவாசிகளின் சமூகங்களை ஸ்தாபிக்கும் பொருட்டு கலாச்சார மதிப்பீடுகளின் அடிப்படையில் புதிய திருச்சபைகளை நிறுவுவதற்கான நடைமுறை செயல்பாடுகளை இப்பாடநெறியானது கற்றுத்தருகிறது.

விருப்பு

12 வாரங்கள்

நாள்: வியாழன்

நேரம்: பி.ப.6:00-8:30

ஆரம்பம்: சித்திரை 29

திறமை அளவு: 2

விரிவுரையாளர்:
**கிறிஸ்துமணி செல்லையா**

# மாலைநேர வகுப்புகள்

## நிகழ்நிலை கற்றல்

### மேய்ப்பத்துவ பராமரிப்பும் உளவியலும்

விருப்பு

மனித நடத்தைகளையும் செயற்பாடுகளையும் ஆழமாக விளங்கிக்கொள்வதில் உளவியலின் பங்களிப்பினை மாணவர்களுக்கு விளக்குகிறது. இதன் மூலமாக மனித பிரச்சினைகளை துல்லியமாக இனங்கண்டு வேதாகம மற்றும் உளவியல் கண்ணோட்டத்தில் சிறப்பான மேய்ப்பத்துவப்பணியினை செய்வதற்கு இப்பாடநெறியானது மாணவர்களை உற்சாகப்படுத்துகிறது.

13 வாரங்கள்

நாள்: திங்கள்

நேரம்: பி.ப.6:00-8:20

ஆரம்பம்: சித்திரை 26

திறமை அளவு: 2

விரிவுரையாளர்:
**நிவேதித்தா ஜீவபாலன்**

### வேதாகமத்திலுள்ள மகத்தான பெண் கதாபாத்திரங்கள்

விருப்பு

வேதாகம வரலாற்றில் பல்வேறு தளங்களில் முக்கிய பங்காற்றிய பெண் கதாபாத்திரங்களின் வாழ்வியலை இப்பாடநெறியானது ஆராய்கிறது. தேவனது உன்னத திட்டத்தில் பெண்களின் தலைமைத்துவத்தையும் அழைப்பையும் உணர்த்தி, தற்கால ஊழியத்திலும் சமூகத்திலும் அவர்களின் பங்களிப்பை புரிந்துகொண்டு வெளிக்கொணர்வதற்கு இப்பாடநெறியானது உதவி செய்கிறது.

12 வாரங்கள்

நாள்: வெள்ளி

நேரம்: பி.ப.6:00-8:30

ஆரம்பம்: சித்திரை 30

திறமை அளவு: 2

விரிவுரையாளர்:
**நிரஞ்ஜனி இராஜரட்ணம்**

# CTS வடகொழும்பு கல்வி நிலைய வகுப்புகள்

## நேர்நிலை கற்றல்

### கிறிஸ்தவ நியாயவாதம்

விருப்பு

கிறிஸ்தவ விசுவாசத்தின் உண்மை தன்மைகளுக்கு பகுத்தறிவுடன் கூடிய நியாயமான விளக்கங்களை அளிப்பதை கற்றுக்கொள்ள இப்பாடநெறியானது உதவுகிறது. இங்கு நியாயவாதம் தொடர்பான முக்கிய பிரச்சனைகளை அறிமுகப்படுத்துவதுடன், கிறிஸ்தவ உலக கண்ணோட்டத்தினை பாதுகாப்பதற்கான அடிப்படையை வழங்கும். மேலும், விசுவாசிகளும், கிறிஸ்தவத்தை அறிய விரும்புவோரிடத்திலும் காணப்படுகிற கிறிஸ்தவத்தை பற்றிய நியாயமான கேள்விகள், சந்தேகங்கங்களுக்கு பதிலளிப்பதற்கு மாணவர்களை தயார்படுத்தும்.

13 வாரங்கள்

நாள்: செவ்வாய்

நேரம்: மு.ப.9:00-11:20

ஆரம்பம்: சித்திரை 27

திறமை அளவு: 2

விரிவுரையாளர்:
**ஜூலியன் தேவதாசன்**

### கிறிஸ்தவ உக்கிராணத்துவம்

விருப்பு

ஆண்டவர் அளித்த கொடைகளை அவரது மகிமைக்காக பயன்படுத்த வேண்டும் என்பதை இப்பாடநெறியானது மையப்படுத்துகிறது. இப்பாடநெறியானது எவ்விதம் ஒரு கிறிஸ்தவன் நன்றியுடனும், பொறுப்புடனும் தனது வளங்களை, திறன்களை, பொருட்களை, தொடர்புகளை தேவனுக்காக பயன்படுத்தலாம் என்பதை ஆராய்கிறது.

12 வாரங்கள்

நாள்: புதன்

நேரம்: மு.ப.9:00-11:30

ஆரம்பம்: சித்திரை 28

திறமை அளவு: 2

விரிவுரையாளர்:
**கிறிஸ்துமணி செல்லையா**

### கிறிஸ்தவ பிள்ளை வளர்ப்பும் குடும்ப வாழ்வும்

விருப்பு

தற்கால சமூக சவால்களுக்கு மத்தியில் கிறிஸ்தவ குடும்பங்களை ஆரோக்கியமாக உருவாக்கவும் பிள்ளைகளை நல்வழிப்படுத்தவும் இப்பாடநெறியானது உதவி செய்கிறது. வேதாகம கோட்பாடுகளின் அடிப்படையில் பிள்ளை வளர்ப்பை கற்றுத்தருவதுடன், சிறந்த பெற்றோராக மிளிர்வதற்கும் பிற பெற்றோர்களுக்கு வழிகாட்டும் ஆலோசனைகளை வழங்குவதற்கும் மாணவர்களை இப்பாடநெறியானது தயார் செய்கிறது.

12 வாரங்கள்

நாள்: வியாழன்

நேரம்: பி.ப.3:00-5:30

ஆரம்பம்: சித்திரை 29

திறமை அளவு: 2

விரிவுரையாளர்:
**இரா. ஹரிஹரன்**

# CTS வடகொழும்பு கல்வி நிலைய வகுப்புகள்

## நேர்நிலை கற்றல்

### பஞ்சாகமம்

விருப்பு

ஆதியாகமம் முதல் உபாகமம் வரையான ஐந்து நூல்களின் இறையியல் அடித்தளத்தை இப்பாடநெறியானது ஆராய்கிறது. பஞ்சாகமத்தை புரிந்துகொள்வதற்கான அடிப்படை வேதாகம கோட்பாடுகளை கற்பிப்பதுடன், அவற்றின் இறையியல் உண்மைகளை இன்றைய வாழ்வியல் சூழலில் நடைமுறைப்படுத்துவதற்கு மாணவர்களுக்கு உதவுகிறது.

13 வாரங்கள்

நாள்: செவ்வாய்

நேரம்: பி.ப.5:40-8:00

ஆரம்பம்: சித்திரை 27

திறமை அளவு: 2

விரிவுரையாளர்:
**தனராஜ் அஜேந்திரன்**

### இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கை

விருப்பு

கிறிஸ்து இயேசுவின் வாழ்க்கை, போதனைகள் மற்றும் ஊழிய மாதிரிகளை இப்பாடநெறி ஆழமாக ஆராய்கிறது. தனிப்பட்ட விசுவாச வாழ்வை கட்டியெழுப்புவதோடு, கிறிஸ்துவின் மாதிரியை பின்பற்றி திறம்பட ஊழியம் செய்வதற்கு மாணவர்களை இப்பாடநெறி தயார் செய்கிறது.

12 வாரங்கள்

நாள்: புதன்

நேரம்: பி.ப.5:30-8:00

ஆரம்பம்: சித்திரை 28

திறமை அளவு: 2

விரிவுரையாளர்:
**காமினி ஜயந்த**

# துவணை 3
# 6 புரட்டாசி – 4 மார்கழி 2027

# நேர அட்டவணை: தவணை 3 (கொஹுவல)

| நேரம் | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி |
|---|---|---|---|---|---|
| காலை | | ○ ஆமோஸ் தீர்க்கதரிசியின் நூல்<br>மு.ப.9:00-11:20<br>வனஜா ராஜ்குமார் | ○ திருச்சபையியலும் இறுதியியலும்<br>மு.ப.9:00-பி.ப.12:30<br>ஜூலியன் தேவதாசன்<br>ஐக்கிய வேளை<br>மு.ப.10:30-11:30 | ○ கிறிஸ்தவ உலகநோக்கை மேம்படுத்தல்<br>மு.ப.9:00-பி.ப.12:20<br>சர்மிலா சுதாகர்<br>ஆராதனை வேளை<br>மு.ப.10:30-11:30 | ○ பவுலின் நிருபங்கள்<br>மு.ப.9:00-மு.ப.11:30<br>மகேஸ்வரன் மாணிக்கராஜா |
| பிற்பகல் | | | ✶ அரசியல் பற்றிய இறையியல்: திருச்சபை, அரசு, சமூகம்<br>பி.ப.3:00-பி.ப.5:30<br>கே. யாபேஸ் | ○ வேதாகம அறநெறி<br>பி.ப.3:00-பி.ப.5:20<br>இரா. ஹரிஹரன் | ○ மாற்கு சுவிசேஷம்<br>பி.ப.3:00-பி.ப.5:30<br>வி. கிறிஷாந்தி சந்ரசேகர் |
| மாலை | □ பரபரப்பான உலகில் மன அழுத்தம் மற்றும் கோபத்தை கையாளுதல்<br>பி.ப.6:00-பி.ப.8:20<br>நிவேதித்தா ஜீவபாலன் | ○ திருச்சபையில் கற்பித்தல் பணியை கட்டியெழுப்புதல்<br>பி.ப.6:00-பி.ப.8:20<br>கிறிஸ்ரி பாலேந்திரன் | □ மோசேயின் வாழ்க்கைக்கூடான படிப்பினை<br>பி.ப.6:00-பி.ப.8:30<br>ஜெயசீலன் ஜோயல் டிரோன் | □ பாலியல் பற்றிய அறநெறி<br>பி.ப.6:00-பி.ப.8:20<br>ப. காந்தன் | □ சமூகத்தில் கிறிஸ்தவ குடும்பம்<br>பி.ப.6:00-பி.ப.8:45<br>நிரஞ்ஜனி இராஜரட்ணம் |

முக்கிய குறிப்பு: குறிப்பிடப்பட்டுள்ள பாடநெறிகள் தவிர்க்க முடியாத காரணங்களினிமித்தம் மாற்றமடையலாம் என்பதை கவனத்தில் கொண்டு பதிவு செய்வதற்கு முன்னர் கல்விசார் காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.

# நேர அட்டவணை: தவணை 3 (வடகொழும்பு)

| நேரம் | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி |
|---|---|---|---|---|---|
| காலை | | **யாக்கோபு நிருபம்**<br>மு.ப.9:00-மு.ப.11:20<br>சர்மிலா சுதாகர் | **மேய்ப்பத்துவ நிருபங்கள்**<br>மு.ப.9:00-மு.ப.11:30<br>கிறிஸ்துமணி செல்லையா | | |
| மாலை | | **Mission in the Book of Acts**<br>6:00pm–8:20pm<br>*Mitchelle Peiris* | **ஜோன் ஒகாரம்பிய**<br>ப.ஏ.5:30-ப.ஏ.8:00<br>අයිවෝ ලූබාලන් | **ரூத்**<br>பி.ப.3:00-பி.ப.5:30<br>வி. கிறிஷாந்தி சந்ரசேகர் | |
| | | **கலாசாரத்தை குறித்த கிறிஸ்தவ கண்ணோட்டம்**<br>பி.ப.5:40-பி.ப.8:00<br>ஜூலியன் தேவதாசன் | **கிறிஸ்தவ பணியாளரின் வாழ்வும் பணியும்**<br>பி.ப.5:30-பி.ப.8:00<br>காமினி ஜயந்த | | |



முக்கிய குறிப்பு: குறிப்பிடப்பட்டுள்ள பாடநெறிகள் தவிர்க்க முடியாத காரணங்களினிமித்தம் மாற்றமடையலாம் என்பதை கவனத்தில் கொண்டு பதிவு செய்வதற்கு முன்னர் கல்விசார் காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.

# வாரநாள் வகுப்புகள்

## நேர்நிலை கற்றல்

### ஆமோஸ் தீர்க்கதரிசியின் நூல்

விருப்பு

ஊழல், அநீதி, வன்முறை போன்ற சமகால பிரச்சனைகளுக்கு ஆமோஸ் தீர்க்கதரிசியின் வார்த்தைகள் பொருத்தமான தீர்வை வழங்குகின்றன. இத்தகைய சவால்களை எதிர்கொண்டு, நமது செல்வாக்கு உட்பட்ட வட்டாரங்களில் தேவனுடைய சித்தத்திற்கேற்ப ஞானத்தோடும் பொறுப்புணர்வோடும் செயற்பட இப்பாடநெறியானது மாணவர்களை தயார்படுத்துகிறது.

13 வாரங்கள்

நாள்: செவ்வாய்

நேரம்: மு.ப.9:00-11:20

ஆரம்பம்: புரட்டாசி 7

திறமை அளவு: 2

விரிவுரையாளர்:
**வனஜா ராஜ்குமார்**

### திருச்சபையியலும் இறுதியியலும்

கட்டாயம்

திருச்சபை, என்பதன் இறையியல் முக்கியத்துவத்தையும் இறுதிக்காலம் குறித்த வேதாகம போதனைகளையும் இப்பாடநெறியானது விரிவாக ஆராய்கிறது. பாரம்பரியங்கள் மற்றும் வழிபாட்டு முறைகளுக்கப்பால் திருச்சபையின் உண்மையான அழைப்பை உணரவும், உள்ளூர் திருச்சபையுடனான ஐக்கியத்தை ஆழப்படுத்தி தேவ ஊழியத்தில் இணைந்து செயற்படவும் இப்பாடநெறியானது உதவுகிறது.

12 வாரங்கள்

நாள்: புதன்

நேரம்: மு.ப.9:00-பி.ப.12:30

ஆரம்பம்: புரட்டாசி 8

திறமை அளவு: 2

விரிவுரையாளர்:
**ஜூலியன் தேவதாசன்**

### கிறிஸ்தவ உலகநோக்கை மேம்படுத்தல்

கட்டாயம்

“உலக நோக்கு என்பது நாம் பார்க்கும் பார்வையல்ல, அதனூடாக பார்க்கும் பார்வை கண்ணாடி” (போல் ஹிபேர்ட்). கிறிஸ்தவ சிந்தனைகளின் வழியே நமது எண்ணங்கள் மற்றும் மனப்பான்மைகளை சீர்தூக்கி பார்க்கவும், உலகியல் போக்குகளுக்கு அப்பாற்பட்டு ஆழமான வாழ்வியல் மாற்றத்தையும் சரியான முடிவுகளையும் பெறுவதற்கு இப்பாடநெறியானது மாணவர்களை தயார்படுத்துகிறது.

13 வாரங்கள்

நாள்: வியாழன்

நேரம்: மு.ப.9:00-பி.ப.12:20

ஆரம்பம்: புரட்டாசி 9

திறமை அளவு: 2

விரிவுரையாளர்:
**சர்மிலா சுதாகர்**

# வாரநாள் வகுப்புகள்

## நேர்நிலை கற்றல்

### வேதாகம அறநெறி

கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவின் குணாதிசயத்தை பிரதிபலித்து உலகிற்கு உப்பாகவும், ஒளியாகவும் திகழ அழைக்கப்பட்டவர்கள். இப்பாடநெறியானது அறநெறி சார்ந்த நடைமுறை கேள்விகளை ஆராய்ந்து, வேதாகம அறநெறி கோட்பாடுகளின் அடிப்படையில் வாழ்க்கையின் ஒவ்வொரு தெரிவுகளையும் செயல்களையும் இன்றைய கால நடைமுறை வாழ்க்கையில் பிரயோகித்து கிறிஸ்துவை பிரதிபலிப்பதற்கு வழிகாட்டியாக அமையும்.

**கட்டாயம்**

13 வாரங்கள்

நாள்: வியாழன்

நேரம்: பி.ப.3:00-5:20

ஆரம்பம்: புரட்டாசி 9

திறமை அளவு: 2

விரிவுரையாளர்:
**இரா. ஹரிஹரன்**

### பவுலின் நிருபங்கள்

புதிய ஏற்பாட்டு பின்னணியை அடிப்படையாக கொண்டு பவுலின் நிருபங்களை ஆழமாக அறிவதற்கு இப்பாடநெறியானது உதவுகிறது. நிருபங்களின் வரலாற்று பின்னணியை புரிந்துகொள்ளவும், வாழ்விலும், ஊழியத்திலும் அவற்றை சரியான விதத்தில் நடைமுறைப்படுத்தவும் இப்பாடநெறியானது மாணவர்களை ஆயத்தப்படுத்துகிறது.

**விருப்பு**

12 வாரங்கள்

நாள்: வெள்ளி

நேரம்: மு.ப.9:00-11:30

ஆரம்பம்: புரட்டாசி 10

திறமை அளவு: 2

விரிவுரையாளர்:
**மகேஸ்வரன் மாணிக்கராஜா**

### மாற்கு சுவிசேஷம்

கிறிஸ்துவை பற்றியும் அவரது செயற்பாடுகள் பற்றியும் கற்றுக்கொள்வதற்கு மாற்கு சுவிசேஷம் மிகவும் முக்கியமான நூலாகும். இயேசுவை தேவனுடைய குமாரனாகவும், இரட்சகராகவும், இலக்குடன் விரைந்து செயற்படும் தலைவராகவும் இந்நூல் சித்தரித்து காண்பிக்கிறது. இப்பாடநெறியானது கிறிஸ்தவ விசுவாசத்தை வலுப்படுத்தி, மாணவர்களை செயற்படுத்த தயார்படுத்துகிறது.

**விருப்பு**

12 வாரங்கள்

நாள்: வெள்ளி

நேரம்: பி.ப.3:00-5:30

ஆரம்பம்: புரட்டாசி 10

திறமை அளவு: 2

விரிவுரையாளர்:
**வி. கிறிஷாந்தி சந்ரசேகர்**

**தவணை 3 | 6 புரட்டாசி – 4 மார்கழி 2027**

# வாரநாள் வகுப்புகள்

## கலப்பு கற்றல் நிலை

### அரசியல் பற்றிய இறையியல்

**திருச்சபை, அரசு, சமூகம்**

தேவனுக்கு விசுவாசமாக இருக்கும் அதேவேளையில் திருச்சபையானது உலகத்தோடும் ஈடுபட வேண்டும் என்பதே இயேசு கிறிஸ்துவின் எதிர்பார்ப்பாக இருந்தது. எனவே திருச்சபையானது அரசோடு ஈடுபடுவதோடு சமூகத்தில் ஒரு தாக்கத்தை உருவாக்க வேண்டும். இப்பாடநெறியானது திருச்சபை எவ்வாறு நேர்மையாக செயற்படுவது, அரசு மற்றும் சமூகத்துடனான திருச்சபையின் உறவிற்கான வரையறைகள் போன்றவற்றை முன்வைக்கின்றது.

விருப்பு

12 வாரங்கள்

நாள்: புதன்

நேரம்: பி.ப.3:00-5:30

ஆரம்பம்: புரட்டாசி 8

திறமை அளவு: 2

விரிவுரையாளர்:
**கே. யாபேஸ்**

**தவணை 3 | 6 புரட்டாசி – 4 மார்கழி 2027**

# மாலைநேர வகுப்புகள்

## நேர்நிலை கற்றல்

### திருச்சபையில் கற்பித்தல் பணியை கட்டியெழுப்புதல்

திருச்சபையில் கிறிஸ்தவ கல்விப்பணியில் ஈடுபடுவோரின் கற்பித்தல் திறன்களை மேம்படுத்த இப்பாடநெறி வடிவமைக்கப்பட்டுள்ளது. கற்பித்தல் குறித்த வேதாகம பின்னணியை கற்றுத்தருவதுடன், வெவ்வேறு வயதினருக்கேற்ற பயிற்றுவிப்பு முறைகளை உருவாக்கி, தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில் கற்பிப்பதற்கு மாணவர்களை ஆயத்தப்படுத்துகிறது.

விருப்பு

13 வாரங்கள்

நாள்: செவ்வாய்

நேரம்: பி.ப.6:00-8:20

ஆரம்பம்: புரட்டாசி 7

திறமை அளவு: 2

விரிவுரையாளர்:
**கிறிஸ்ரி பாலேந்திரன்**

# மாலைநேர வகுப்புகள்

## நிகழ்நிலை கற்றல்

### பரபரப்பான உலகில் மன அழுத்தம் மற்றும் கோபத்தை கையாளுதல்

விருப்பு

நவீன வாழ்வின் ஓய்வின்மையால் உருவாகும் மன அழுத்தம் மற்றும் கோப உணர்வுகளை கையாளுவதற்கான நடைமுறை வழிகளை இப்பாடநெறியானது ஆராய்கிறது. இத்தகைய சவால்களுக்கு கிறிஸ்தவ விசுவாசத்தின் அடிப்படையில் பதிலளிக்கவும், மன அழுத்தத்தினால் பாதிக்கப்படுவோருக்கு சிறந்த ஆலோசனைகளை வழங்கவும் மாணவர்களை இப்பாடநெறியானது ஆயத்தப்படுத்துகிறது.

13 வாரங்கள்

நாள்: திங்கள்

நேரம்: பி.ப.6:00-8:20

ஆரம்பம்: புரட்டாசி 6

திறமை அளவு: 2

விரிவுரையாளர்: **நிவேதித்தா ஜீவபாலன்**

### மோசேயின் வாழ்க்கைக்கூடான படிப்பினை

விருப்பு

இஸ்ரவேலின் தலைசிறந்த தீர்க்கதரிசியான மோசேயின் வாழ்வியலையும் அவரது தலைமைத்துவ பயணத்தையும் இப்பாடநெறி மையப்படுத்துகிறது. மோசேயின் அனுபவங்கள் மூலம் விசுவாச பாதையையும், சீஷத்துவத்தின் பண்புகளையும் ஆவிக்குரிய தலைமைத்துவத்திற்கான நடைமுறை வழிகளையும் மாணவர்கள் பெற இப்பாடநெறியானது வழிவகுக்கிறது.

12 வாரங்கள்

நாள்: புதன்

நேரம்: பி.ப.6:00-8:30

ஆரம்பம்: புரட்டாசி 8

திறமை அளவு: 2

விரிவுரையாளர்: **ஜெயசீலன் ஜோயல் டிரோன்**

### பாலியல் பற்றிய அறநெறி

விருப்பு

மானிட பாலியலை குறித்த பல்வேறு பிரச்சினைகளை வேதாகம கண்ணோட்டத்தில் இப்பாடநெறியானது ஆய்வு செய்யும். இப்பாடநெறியில் பாலியலை குறித்த வேதாகம கண்ணோட்டத்துக்கு விளக்கமளித்து, பாலினம், பாலியல் அபிலாசைகள், பாலியல் வரம்புகள் அத்துடன் ஆபாச படங்களுக்கு அடிமையாதல் குறித்த பிரச்சினைகள் ஆராயப்பட்டு ஆரோக்கியமான பாலியல் உறவை மேம்படுத்துவதில் அவதானம் செலுத்துகிறது.

13 வாரங்கள்

நாள்: வியாழன்

நேரம்: பி.ப.6:00-8:20

ஆரம்பம்: புரட்டாசி 9

திறமை அளவு: 2

விரிவுரையாளர்: **ப. காந்தன்**

# மாலைநேர வகுப்புகள்

## நிகழ்நிலை கற்றல்

### சமூகத்தில் கிறிஸ்தவ குடும்பம்

தேவனது சிருஷ்டிப்பில் முதன்மையான அடித்தளமான குடும்பத்தின் பங்கினை இப்பாடநெறியானது ஆராய்கிறது. கிறிஸ்தவ குடும்பங்கள் தங்கள் வாழ்வின் வழியே அயலவருக்கும், சமூகத்திற்கும் எவ்வாறு சாட்சியாக திகழ முடியும் என்பதையும், பாராமரிப்பு பொறுப்புடனும், சமூகப்பொறுப்புணர்வுடனும் எவ்வாறு ஆழமாக ஈடுபட முடியுமென்பதையும் மாணவர்கள் இப்பாடநெறிக்கூடாக கற்றுக்கொள்வர்.

விருப்பு

11 வாரங்கள்

நாள்: வெள்ளி

நேரம்: பி.ப.6:00-8:45

ஆரம்பம்: புரட்டாசி 10

திறமை அளவு: 2

விரிவுரையாளர்:
**நிரஞ்ஜனி இராஜரட்ணம்**

# CTS வடகொழும்பு கல்வி நிலைய வகுப்புகள்

## நேர்நிலை கற்றல்

### யாக்கோபு நிருபம்

அளவில் சிறிதான இந்நிருபம் நடைமுறை வாழ்வியல் சவால்களை குறித்த ஆழமான பார்வையை வழங்குகிறது. மெய்யான தேவபக்தி, விசுவாசம் மற்றும் ஞானத்துடன் கூடிய கிறிஸ்தவ வாழ்வை தனிப்பட்ட வாழ்விலும், திருச்சபை ஊழியத்திலும் வெளிப்படுத்தவும் ஆவிக்குரிய முதிர்ச்சியோடு மற்றவர்களுக்கு கற்றுக்கொடுக்கவும் இப்பாடநெறியானது மாணவர்களை ஆயத்தப்படுத்துகிறது.

விருப்பு

13 வாரங்கள்

நாள்: செவ்வாய்

நேரம்: மு.ப.9:00-11:20

ஆரம்பம்: புரட்டாசி 7

திறமை அளவு: 2

விரிவுரையாளர்:
**சர்மிலா சுதாகர்**

### மேய்ப்பத்துவ நிருபங்கள்

அப்போஸ்தலனாகிய பவுல் தீமோத்தேயு, தீத்து, பிலேமோன் ஆகியோருக்கு எழுதிய நிருபங்களை மையமாக கொண்டு இப்பாடநெறியானது வடிவமைக்கப்பட்டுள்ளது. திருச்சபை தலைவர்களுக்கு பவுல் வழங்கிய தலைமைத்துவ வழிகாட்டல்களையும், சத்தியங்களையும் கற்று தற்கால திருச்சபை ஊழியத்தை சீரமைக்கவும் வழிநடத்தவும் இப்பாடநெறியானது மாணவர்களுக்கு உதவி செய்கிறது.

விருப்பு

12 வாரங்கள்

நாள்: புதன்

நேரம்: மு.ப.9:00-11:30

ஆரம்பம்: புரட்டாசி 8

திறமை அளவு: 2

விரிவுரையாளர்:
**கிறிஸ்துமணி செல்லையா**

### ரூத்

ரூத் நூலினை கூர்ந்து ஆராய்வதன் மூலம் அதன் இறையியல் மற்றும் இலக்கிய சிறப்புகளை மாணவர்கள் கற்றுக்கொள்வர். உடன்படிக்கையின் உண்மைத்தன்மை, மீட்பு, தேவனின் பராமரிப்பு போன்ற முக்கிய கருப்பொருள்களை புரிந்துகொள்வதோடு, மீட்பின் வரலாறிலும் கிறிஸ்துவின் வம்சாவளியிலும் ரூத் வகிக்கும் தனித்துவமான இடத்தையும் இப்பாடநெறியானது மையப்படுத்துகிறது.

விருப்பு

13 வாரங்கள்

நாள்: வியாழன்

நேரம்: பி.ப.3:00-5:20

ஆரம்பம்: புரட்டாசி 9

திறமை அளவு: 2

விரிவுரையாளர்:
**வி. கிறிஷாந்தி சந்ரசேகர்**

# CTS வடகொழும்பு கல்வி நிலைய வகுப்புகள்

## நேர்நிலை கற்றல்

### கலாச்சாரத்தை குறித்த கிறிஸ்தவ கண்ணோட்டம்

விருப்பு

உள்ளூர் கலாச்சாரத்திற்கும் கிறிஸ்தவ விசுவாசத்திற்கும் இடையிலான தொடர்பை இப்பாடநெறி ஆராய்கிறது. பாரம்பரிய கலாச்சாரம், உலகியல் கலை மற்றும் இலக்கியங்களை எதிர்கொள்ளும் முறைகள், மற்றும் கலாச்சாரத்தின் அவசியம் குறித்த கேள்விகளுக்கு கிறிஸ்தவ கோட்பாடுகளினூடாக தெளிவான புரிதலையும் வழிகாட்டலையும் வழங்குவதற்கு இப்பாடநெறியானது மாணவர்களை தயார் செய்கிறது.

13 வாரங்கள்

நாள்: செவ்வாய்

நேரம்: பி.ப.5:40-8:00

ஆரம்பம்: புரட்டாசி 7

திறமை அளவு: 2

விரிவுரையாளர்:
**ஜூலியன் தேவதாசன்**

### கிறிஸ்தவ பணியாளரின் வாழ்வும் பணியும்

விருப்பு

கிறிஸ்தவ ஊழியத்தின் தனித்துவமான அழைப்பையும் பொறுப்புகளையும் இப்பாடநெறி மையப்படுத்துகிறது. கிறிஸ்தவ ஊழியன் திருச்சபை, சமூகப்பணிகளில் திறம்பட பணியாற்றுவதற்கும், தலைமைத்துவ பாதையில் ஆவிக்குரிய முதிர்ச்சியையும் ஆரோக்கியமான குடும்ப உறவுகளை கட்டியெழுப்புவதற்குமான வழிமுறைகளை மாணவர்கள் இப்பாடநெறிக்கூடாக கற்றுக்கொள்ளலாம்.

12 வாரங்கள்

நாள்: புதன்

நேரம்: பி.ப.5:30-8:00

ஆரம்பம்: புரட்டாசி 8

திறமை அளவு: 2

விரிவுரையாளர்:
**காமினி ஜயந்த**

# விரிவுரையாளர்களின் விபரங்கள்



**நிவேதித்தா ஜீவபாலன்,** BA (Psy)

ஆலோசனைப்பணியில் 25 ஆண்டுகளுக்கும் மேலாக சிறந்த அனுபவமுள்ள விசேட மனநல நிபுணர் ஆவார். சிறுவர் மற்றும் வயது வந்தோருக்கு ஆலோசனை வழங்குவதில் சிறந்து விளங்குகிறார். ஆலோசகர்களை பயிற்றுவித்து அவர்களை மேற்பார்வை செய்துள்ளதுடன், இலங்கையில் மனநலம் மற்றும் சிறுவர் பாதுகாப்பு முயற்சிகளுக்கு பெருமளவான பங்களிப்பினை வழங்கியுள்ளார். இவர் வெள்ளவத்தையிலுள்ள கொழும்பு சுவிசேஷ கூடார சபையை தனது ஆராதிக்கும் திருச்சபையாக கொண்டுள்ளார்.



**வனஜா ராஜ்குமார்,** BTh, MChS

***கொழும்பு இறையியல் கல்லூரியின் கல்விப்பீட உறுப்பினரான இவர், கல்லூரியின் உதவி நூலகவியலாளராகவும், இறையியலுக்கான தமிழ்மொழி செம்மையாளராகவும் பணியாற்றுகிறார்.*** பெண்கள் மற்றும் சிறுவர் ஊழியங்களில் ஈடுபட்டு வருவதுடன், இலங்கை வேதாகம சங்கத்தின் 'Master Facilitator in Healing the Wounds of Trauma Children' பயிற்சியை பெற்றவரும், "தாயின் வடிவமைப்பு" என்பதின் சிரேஷ்ட வளவாளருமாவார். இவர், கொழும்பு-13, ஜிந்துப்பிட்டி, புனித தோமாவின் ஆலயத்தினை தனது ஆராதிக்கும் திருச்சபையாக கொண்டுள்ளார்.



**ஜூலியன் தேவதாசன்,** BTh, MDiv, MTh

**கொழும்பு இறையியல் கல்லூரியின் உதவி கல்விப்பீடாதிபதியான** இவர், இலங்கையின் தெற்காசிய இறையியல் நிறுவனம் (SAIT), தென்கொரியாவின் இறையியல் கற்கைகள் மற்றும் திருத்தூதுப்பணிக்கான ஆசிய மையம் (ACTS), தென்னாபிரிக்காவின் தென்னாபிரிக்க இறையியல் கல்லூரி ஆகியவற்றின் பட்டதாரியாவார். இவர் கருக்கலைப்பிலிருந்து மீண்டு உயிர்வாழ்பவர்களின் வலையமைப்பின் (Abortion Survivors Network) சர்வதேச கருக்காப்பிற்கான (Pro-Life) விழிப்புணர்வு பேச்சாளராகவும், தென்னாபிரிக்காவின் ACRP- CPSC அங்கீகாரம் கொண்ட கிறிஸ்தவ மேய்ப்பத்துவ பணியில் சமயம்சார் நிபுணராகவும், ஹாகாய் நிறுவனத்தின் தேசிய ஒருங்கிணைப்பாளராகவும், இலங்கை திருச்சபையின் கொழும்பு மறைமாவட்ட கிறிஸ்தவ கல்வி சபையின் வளவாளராகவும் சேவையாற்றி வருகிறார். இவர் சிலாபம், புனித யாக்கோபின் திருச்சபையை தனது ஆராதிக்கும் திருச்சபையாக கொண்டுள்ளார்.



**சர்மிலா சுதாகர்,** BTh

கொழும்பு இறையியல் கல்லூரியின் பட்டதாரியான இவர், சிரேஷ்ட கணக்காளராவார். கடந்த இரு தசாப்தங்களாக யுத்தம் மற்றும் பேரழிவுகளால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்காக கிறிஸ்தவ சர்வதேச உதவி அமைப்புகளுடன் ஒன்றிணைந்து பங்காற்றியுள்ளார். இவர் மிஸ்பா ஜெப மிஷனரி ஊழியம் திருச்சபையினை தனது ஆராதிக்கும் திருச்சபையாக கொண்டுள்ளார்.

# விரிவுரையாளர்களின் விபரங்கள்



**காமினி ஜயந்த,** BTh, MSW

கொழும்பு இறையியல் கல்லூரியின் பட்டதாரியான இவர் Infinity Centre for Higher Studies (இலங்கை)-ன் முழு இலங்கைக்குமான நிர்வாக ஒருங்கிணைப்பாளராக கடமையாற்றுகிறார். இலங்கையில் பல பாகங்களுக்கும் சென்று வேதாகம பாடங்களையும், பிரசங்கங்களையும் மேற்கொள்வதுடன், போதைப்பொருட்களுக்கு அடிமையாயுள்ளவர்களை புனரமைக்கும் பணியிலும் ஈடுபட்டுள்ளார். Ragama, Thuduwegedera இலுள்ள Prayer Tower Church இனை தனது ஆராதிக்கும் திருச்சபையாகவும் கொண்டுள்ளதுடன் அதன் உதவி போதகராகவும் ஊழியமாற்றி வருகிறார்.



**இரா. ஹரிஹரன்,** BTh, MMin

**கொழும்பு இறையியல் கல்லூரியின் மாகாண கல்வி நிலையங்களின் முகாமையாளரான இவர்,** சிங்கப்பூர் திரித்துவ இறையியல் கல்லூரியில் இளமாணி, முதுமாணி பட்டங்களை பெற்றவருமாவார். மிக நீண்ட காலமாக இளைஞர் பணிகளில் ஈடுபட்டு வருகிறார். வெள்ளவத்தை மூர் வீதியில் அமைந்துள்ள மெதடிஸ்த திருச்சபையை தனது ஆராதிக்கும் திருச்சபையாக கொண்டுள்ளார்.



**கே. யாபேஸ்,** BTh

கொழும்பு இறையியல் கல்லூரியின் பட்டதாரியான இவர் திருச்சபைகளில் கற்பித்தல், பிரசங்கித்தல், தலைமைத்துவ பயிற்சியளித்தல், வேதாகம கல்லூரியில் கற்பித்தல் போன்ற பணிகளிலும் ஈடுபட்டு வருகிறார். AOG திருச்சபையினை தனது ஆராதிக்கும் திருச்சபையாக கொண்டுள்ளதுடன் அதன் போதகராகவும் பணியாற்றுகிறார்.



**சந்ரசேகரம் ரொஷான் க்ளவன்ஸ்,** BTh

கொழும்பு இறையியல் கல்லூரியின் பட்டதாரியான இவர், திருச்சபைகளை நிறுவும் ஊழியத்திலும், சீஷர்களை உருவாக்குவதிலும் மற்றும் அருட்பணியிலும் ஈடுபட்டு வருகின்றார். இறக்குவானை கிறிஸ்தவ எழுப்புதல் திருச்சபையின் தலைமை போதகராக ஊழியம் செய்வதோடு சப்ரஹமுவ போதகர் ஒன்றியத்தின் செயலாளராகவும் சேவையாற்றி வருகிறார்.

# விரிவுரையாளர்களின் விபரங்கள்



**கிறிஸ்துமணி செல்லையா,** DipEng (Mech), BTh, MA, MDiv

கொழும்பு இறையியல் கல்லூரியின் பட்டதாரியான இவர் Campus Crusade நிறுவனத்தின் பல்கலைக்கழக ஊழியத்தின் நிதி முகாமையாளராகவும், திருச்சபை ஸ்தாபித்தல் இயக்கத்தின் இணைப்பாளராகவும் கடமையாற்றி உள்ளார். நீண்ட காலமாக முழுநேரப்பணியில் ஈடுபட்டு வரும் இவர் தற்பொழுது இரட்சணியசேனை திருச்சபையின் கல்வி இணைப்பாளராகவும், திருச்சபைகளில் சீஷத்துவ பயிற்சியளித்தல், கற்பித்தல், பிரசங்கித்தல், வேதாகம கல்லூரிகளில் கற்பித்தல் போன்ற பணிகளிலும் ஈடுபட்டு வருகிறார். கொழும்பு, கொம்பனித்தெரு, இரட்சணியசேனை திருச்சபையை தனது ஆராதிக்கும் திருச்சபையாக கொண்டுள்ளார்.



**தனராஜ் அஜேந்திரன்,** BTh, MA

கொழும்பு இறையியல் கல்லூரியின் பட்டதாரியான இவர், இலங்கை கிறிஸ்தவ சீர்திருத்த திருச்சபையினை தனது ஆராதிக்கும் திருச்சபையாக கொண்டுள்ளதுடன், கடந்த 13 வருடங்களாக வெள்ளவத்தை கிளையில் ஆரம்ப பணியில் ஈடுபட்டவருமாவார். திருச்சபை ஸ்தாபித்தல், சீஷத்துவம், வாலிபருக்கான பயிற்சி மற்றும் இறையியல் கல்லூரிகளில் கற்பித்தல் பணிகளில் தன்னை அர்ப்பணித்துள்ளார்.



**யொஹான் கிருஷ்ணகுமார்,** BTh, MTh

நோர்ட்டன் பிரிட்ஜ் SAIT கலாசாலையில் இளமாணி பட்டத்தையும் வேல்ஸ்ஸின் Bangor பல்கலைக்கழகத்தில் நடைமுறை இறையியலில் முதுமாணி பட்டத்தையும் Global Institute of Theology (WCRC)-ல் சீர்திருத்த இறையியல் பட்டத்தையும் பெற்ற இவர் கண்டி City Mission நிறுவனத்தின் நிகழ்ச்சி ஒருங்கமைப்பாளராகவும், உள்ளூர் மற்றும் வெளியூர் வேதாகம கலாசாலைகளில் விரிவுரையாளராகவும், தனது உள்ளூர் திருச்சபையில் இளைஞர் ஊழிய பணியாளராகவும் மூப்பராகவும் சேவையாற்றுகின்றார். கண்டி, பிரஸ்படேரியன் திருச்சபையை தனது ஆராதிக்கும் திருச்சபையாக கொண்டுள்ளார்.



**கிறிஸ்டி சாமுவேல்,** EPCM, BE, MA

Mission to Asia (இந்தியா), Infinity Centre for Higher Studies (இலங்கை) ஆகியவற்றின் ஸ்தாபக இயக்குனராவார். இந்தியாவின், எம்.கே பல்கலைக்கழகம் (கணணி விஞ்ஞான தொழிநுட்பவியல் [BE]), புனித. பவுல் இறையியல் கல்லூரி (பிரயோக இறையியலில் முதுமாணி), மார்ட்டின் லூத்தர் பல்கலைக்கழகம் (கிறிஸ்தவ முகாமைத்துவ பாடநெறி) போன்றவற்றில் பட்டம் பெற்றவராவார். தெற்காசியாவின் பல்தரப்பட்ட திருத்தூதுப்பணி செயற்பாடு அமைப்புகளின் உறுப்பினரும், இலங்கையில் தகவல் தொழில்நுட்ப கைத்தொழில் அமைப்பு நிர்வாகக்குழுவின் அங்கத்தவருமாவார் (கல்விப்பிரிவு). வெள்ளவத்தை, மூர் வீதியில் அமைந்துள்ள மெதடிஸ்த திருச்சபையை தனது ஆராதிக்கும் திருச்சபையாக கொண்டுள்ளார்.

# விரிவுரையாளர்களின் விபரங்கள்



**வி. கிறிஷாந்தி சந்ரசேகர்,** Dip (Counselling), HND (Counselling), BTh

கொழும்பு இறையியல் கல்லூரியின் பட்டதாரியும், சமூக அபிவிருத்தி தேசிய நிறுவனத்தின் (National Institute of Social Development) ஆற்றுப்பணியில் டிப்ளோமா மற்றும் Chamber of Psychology and Counsellingஇல் உயர் தேசிய டிப்ளோமா (HND) பட்டங்களை பெற்றவருமான இவர், குடும்பங்கள் மத்தியிலே ஆற்றுப்பணியிலே ஈடுபட்டு வருகிறார். வத்தளை, சீயோன்மலை கூடார திருச்சபையை தனது ஆராதிக்கும் திருச்சபையாக கொண்டுள்ளதுடன், அதன் நிர்வாக சபையின் காரியதரிசியாகவும், ஞாயிறு பாடசாலை கண்காணிப்பாளராகவும் கடமையாற்றி வருகிறார்.



**கிறிஸ்ரி பாலேந்திரன்,** Certificate in Counselling CWR-UK, BD

இவர் சேராம்பூர் பல்கலைக்கழகத்தின் பட்டதாரியும், சர்வதேச வேதாகம கழகத்தின் இலங்கைக்கான இயக்குனருமாவார். கற்பித்தல் பணியில் நீண்ட கால அனுபவமுடையவரும், பயிற்றுவிக்கப்பட்ட ஆசிரியருமாவார். இவர் மூர் வீதியிலுள்ள மெதடிஸ்த திருச்சபையை தனது ஆராதிக்கும் திருச்சபையாக கொண்டுள்ளார்.



**ஞா. ஸ்டன்லி நெல்சன்,** BTh, MMin

***கொழும்பு இறையியல் கல்லூரி செயற்குழு நிர்வாக உறுப்பினரும்,*** சிங்கப்பூர் திரித்துவ இறையியல் கல்லூரியின் இளமாணி, முதுமாணி பட்டதாரியுமாவார். இலங்கை தேசிய கிறிஸ்தவ சுவிசேஷ கூட்டணியின் முன்னாள் தலைவராகவும், இலங்கை கிறிஸ்தவ சீர்திருத்த திருச்சபையின் முன்னாள் தலைவராகவும் பணியாற்றியுள்ளதுடன், தற்போது அத்திருச்சபையின் செயலாளராகவும், அதன் இறையியல் கல்வியகத்தின் அதிபராகவும், தெஹிவலை திருச்சபையின் போதகராகவும் பணியாற்றுவது குறிப்பிடத்தக்கது. அத்துடன் இலங்கை தேசிய கிறிஸ்தவ மன்றத்தின் திருச்சபை ஒருமைப்பாட்டுக்கான ஆணைக்குழுவின் தற்போதைய தலைவராகவும் சேவையாற்றுகிறார்.



**ஜோன் பெனடிக்ட்,** BTh

கொழும்பு இறையியல் கல்லூரியின் பட்டதாரியான இவர், கொழும்பிலுள்ள Word God Ministries திருச்சபையின் தலைமை போதகராகவும், வேதாகம கல்வி ஆசிரியராகவும் பணியாற்றுகிறார். அனேக திருச்சபைகளில் கற்பித்தல், பிரசங்கித்தல் பணிகளில் ஈடுபடுவதுடன், பதின்ம வயதினர் மற்றும் வாலிபர்கள் மத்தியிலும் பணியாற்றி வருகிறார்.

# விரிவுரையாளர்களின் விபரங்கள்



**மோகன் இதயகுமார் அழகக்கோன்,** BTh

கொழும்பு இறையியல் கல்லூரியின் பட்டதாரியான இவர், கிறிஸ்துவுக்காக இளைஞர் ஸ்தாபனத்தில் பயிற்சி நிர்வாக இயக்குனராகவும், சப்பிரகமுவா, களுத்துறை பிரிவுகளுக்கு ஊழிய பொறுப்பாளராகவும் கடமையாற்றி வருகின்றார். கடந்த 30 ஆண்டுகளாக யாழ்ப்பாணம், மன்னார், மட்டக்களப்பு, கொழும்பு பகுதிகளில் இளைஞர்கள் மத்தியில் ஊழியம் செய்வதுடன் இளம் தலைவர்களுக்கு பயிற்சி கொடுப்பவராகவும் பணியாற்றுகிறார். இவர் வெள்ளவத்தை, மூர் வீதியிலுள்ள மெதடிஸ்த திருச்சபையை தனது ஆராதிக்கும் திருச்சபையாக கொண்டுள்ளார்.



**நிரஞ்ஜனி இராஜரட்ணம்,** HND (Counselling), BTh

கொழும்பு இறையியல் கல்லூரியின் பகுதி நேர கல்விப்பீட உறுப்பினரான இவர், இக்கல்லூரியின் இளமாணி பட்டதாரியுமாவார். தற்போது மருத்துவ உளவியல் முதுமாணி பட்டப்படிப்பினை கற்றுக்கொண்டிருக்கிறார். World Vision Sri Lanka நிறுவனத்தில் 15 ஆண்டுகளுக்கு மேலாகவும், The Salvation Army Sri Lanka தலைமையகத்தில், சிறுவர் நிகழ்ச்சி திட்டங்கள் தொடர்பான அறிவுரை ஆலோசகராகவும் மற்றும் Wesley College-ல் மாணவ ஆலோசகராகவும் பணியாற்றியுள்ளார். Child Rights Activistஆக இருப்பதுடன், திருச்சபைகள் மற்றும் கிறிஸ்தவ நிறுவனங்களுடன் இணைந்து ஆலோசகராக பணிபுரிந்து வருகின்றார்.



**மகேஸ்வரன் மாணிக்கராஜா,** BTh

கொழும்பு இறையியல் கல்லூரியின் பட்டதாரியான இவர் கொழும்பு, மக்கள் தேவ சபையினை தனது ஆராதிக்கும் திருச்சபையாக கொண்டுள்ளதுடன், அதன் போதகராகவும் பணியாற்றி வருகின்றார்.



**ஜெயசீலன் ஜோயல் டிரோன்,** BTh

கொழும்பு இறையியல் கல்லூரியின் பட்டதாரியான இவர், ஐந்து வருடங்களுக்கு மேலாக தனியார் பெருநிறுவனங்களில் நிதி மற்றும் நிர்வாக துறையில் தொழில் புரிந்தவர். பின்னர் ஐந்து வருடங்கள் கொழும்பு சுவிசேஷ கூடார சபையின் வாலிபர் ஐக்கியத்தின் தலைவராகவும் போதகர் குழுவின் அங்கத்தவராகவும் பணி புரிந்துள்ளார். பின்னர் திருகோணமலை மாவட்டத்திலுள்ள கிறிஸ்துவின் ஜெபவீடு திருச்சபையின் உதவிப்போதகராக பணியாற்றி, தற்போது கொழும்பு சுவிசேஷ கூடார சபை, திருகோணமலை போதகராக பணியாற்றுகிறார்.



**ப. காந்தன்,** BTh, MSW

கொழும்பு இறையியல் கல்லூரியின் இளமாணி பட்டதாரியான இவர், தேசிய சமூக நிறுவனத்தில் உளவளத்துணை பட்டச்சான்றிதழினையும் நிறைவு செய்து, தற்போது சமூகப்பணிக்கான முதுமாணியினை தொடர்கின்றார். 20 வருடங்களுக்கு மேலாக கிறிஸ்துவுக்காக இளைஞர் இயக்கத்தில் பணியாளராக தேவனின் பணியை தொடர்கின்றார்.

# CTS கற்கைத்திட்டங்கள்

நீங்கள் உங்களது தனிப்பட்ட விருப்பத்தின்படி பாடநெறிகளை தெரிவு செய்தாலும்கூட, ஆகக்கூடிய பயனை பெற்றுத்தரக்கூடிய வகையில் கொழும்பு இறையியல் கல்லூரி வழங்கும் ஒரு கற்கைத்திட்டத்திற்கு உங்களை பதிவு செய்து கொள்ளுவதை குறித்து சிந்திக்கும்படி நாம் உங்களை உற்சாகப்படுத்துகிறோம்.

கொழும்பு இறையியல் கல்லூரி நான்கு மட்டங்களில் கற்கைத்திட்டங்களை வழங்குகின்றது. இவையனைத்தும் ஆசிய இறையியல் சங்கத்தினால் (Asia Theological Association) அங்கீகரிக்கப்பட்டவையாகும். உங்களுக்கு அதிகளவு பயனை தரக்கூடிய பாடநெறி எதுவென்பதை கண்டறியுங்கள்:

**கிறிஸ்தவ கல்விச்சான்றிதழ் (CCS)**
இது வாழ்க்கை பயணம், தொழில் மற்றும் ஊழியம் ஆகியவற்றிற்கு 21-ம் நூற்றாண்டிலுள்ள கிறிஸ்தவர்களை ஆயத்தப்படுத்துவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.
கற்கை மொழி: தமிழ், சிங்களம், ஆங்கிலம்
*தேவைப்படும் மொத்த திறமை அளவு (புள்ளிகள்): 36*

**கிறிஸ்தவ கல்விச்சான்றிதழ்: சிறுவர் ஊழிய களம் (CCS-CM)**
திருச்சபைக்கும் சமூகத்திற்குமான செயற்திறன் மிக்க சேவையாளர்களை பயிற்றுவிப்பதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.
கற்கை மொழி: தமிழ், சிங்களம்
*தேவைப்படும் மொத்த திறமை அளவு (புள்ளிகள்): 36*
*நிகழ்நிலை மூலமாக கற்பித்தல் இடம்பெறும்*

**இறையியலில் டிப்ளோமா (DipTh)**
இது கிறிஸ்தவ ஊழியர்கள் ஊழியத்திற்கு தேவையான ஆழமான வேதாகம அறிவு மற்றும் செயற்திறன்களை, பெற்றுக்கொண்டு தங்களை ஆயத்தப்படுத்தும்படி வடிவமைக்கப்பட்டுள்ளது.
கற்கை மொழி: தமிழ், சிங்களம், ஆங்கிலம்
*தேவைப்படும் மொத்த திறமை அளவு (புள்ளிகள்): 72*

**இறையியலில் இளமாணி (BTh)**
இது கிறிஸ்தவர்களை சபையின் தலைமைத்துவத்திற்கு (மேய்ப்பத்துவம், கற்பித்தல் அல்லது அது போன்ற ஏனைய ஊழியங்கள்) பயிற்றுவிப்பதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.
கற்கை மொழி: தமிழ், சிங்களம், ஆங்கிலம்
*தேவைப்படும் மொத்த திறமை அளவு (புள்ளிகள்): 120*

**மேலதிக தகவல்கள் மற்றும் உதவிக்கு தொடர்பு கொள்க:**
கல்விசார் காரியாலயம்
011-2890809; student.services@cts.lk; www.cts.lk

**வடகொழும்பு கல்வி நிலையம்:**
0771415670; nc@cts.lk

# கிறிஸ்துவ கல்விச்சான்றிதழ்
# சிறுவர் ஊழிய களம்

**பாடநெறிகள்:**

- வாரத்திற்கு இரண்டு தடவை 3 மணிநேர அமர்வுகள் நடைபெறும்.
  - ஒவ்வொரு திங்கட்கிழமை முதல் வியாழக்கிழமை மாலை 6.00 முதல் மாலை 9.00 வரை
- ஒவ்வொரு திறமை அளவும் 2 மணித்தியாலங்களை உள்ளடக்கியுள்ளது.
- மாணவர்களால் இரண்டு ஆண்டுகளில் பூர்த்தி செய்யக்கூடிய வகையில் இந்த பாடநெறி வடிவமைக்கப்பட்டுள்ளது.

| | பாடங்கள் | திறமை அளவு |
|---|---|---|
| கட்டாய பாடங்கள்<br>வேதாகமம் மற்றும் இறையியல் பாடங்கள்<br>சிறுவர் ஊழிய பாடங்கள் | <br>04<br>04 | <br>08<br>08 |
| விருப்புப்பாடங்கள் | 10 | 20 |
| கருத்தரங்குகள் | 04 | 00 |
| மொத்தம் | 22 | 36 |

கவனிக்கப்பட வேண்டியது: சான்றிதழை பெற்றுக்கொள்வதற்கு மேலே உள்ள அனைத்தும் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

**பாடநெறிகள் கற்றுக்கொடுக்கப்படும் முறைகள்:**

**நிகழ்நிலை:** பாடநெறிகள் Zoom வழியாக நடைபெறும். பாடநெறிக்கான பாடக்குறிப்புக்களை Moodle வழியாக பெற்றுக்கொள்ளலாம். இதற்கு செயற்திறனுடைய இணைய வசதியும் டிஜிட்டல் சாதனமொன்றும் அவசியம்.

**மேலதிக தகவல்களுக்கான தொடர்பு:**

திருமதி. கிறிஷ்ணி எதிரிசிங்க
ஒருங்கிணைப்பாளர் : சிறுவர் ஊழிய களம்
+94 764823127
cm@cts.lk

# கிறிஸ்தவ கல்விச்சான்றிதழ்
# சிறுவர் ஊழிய களம்

**கட்டாயம்: வேதாகமம் மற்றும் இறையியல் பாடங்கள்**
சிறுவர்கள் குறித்த வேதாகம கண்ணோட்டம்
இறையியலுக்கான அறிமுகம்
புதிய ஏற்பாட்டிற்கான அறிமுகம்
கிறிஸ்தவ உலகநோக்கை மேம்படுத்தல்

**கட்டாயம்: சிறுவர் ஊழிய பாடங்கள்**
பரிபூரணமான சிறுவர் அபிவிருத்தி
சிறுவர்களுக்கு வேதாகமத்தை கற்பித்தல்
சிறுவர், திருச்சபை மற்றும் திருத்தூதுப்பணி
சிறுவர் பணியில் அறநெறிகள்

**விருப்புப்பாடங்கள்**
துஷ்பிரயோகத்திற்குள்ளான சிறுவர்களுக்கான பணி
வாலிபர் ஊழியம்
பராமரிப்பாளரின் ஆவிக்குரிய உருவாக்கம் மற்றும் மன அழுத்தத்திற்கான முகாமைத்துவம்
கிறிஸ்தவ கண்ணோட்டத்தில் தொடர்பாடல்
கிறிஸ்தவ பிள்ளை வளர்ப்பு
சிறுவர்களுக்கான சீஷத்துவம்
உங்களுக்குள் இருக்கும் தலைமைத்துவத்தை வளர்த்தெடுத்தல்
ஆபத்திலிருக்கும் சிறுவர்கள் மீதான திருச்சபையின் பங்கு
கலாச்சாரத்தினை புரிந்து கொள்ளல்
சிறுவர் ஆற்றுப்பணி

தயவு செய்து அவதானிக்கவும்: குறிப்பிடப்பட்டுள்ள பாடநெறிகள் தவிர்க்க முடியாத காரணங்களினிமித்தம் மாற்றமடையலாம்.
பதிவு செய்வதற்கு முன்னர் சிறுவர் ஊழிய களத்தின் ஒருங்கிணைப்பாளரை தொடர்பு கொள்ளவும்.




# CTS வெளியீடு

புதிய புத்தகத்தை ஆழமாக வாசியுங்கள்! தேவனுடைய வார்த்தையோடு உங்கள் உறவை புதிய நிலைக்கு உயர்த்துங்கள்!

1-வது தளத்திலுள்ள எமது CTS புத்தக நிலையத்திற்கு விஜயம் செய்யுங்கள்



## CTS நூலகம்

**42,000 புத்தகங்களினுடைய**

நூலக சேகரிப்புகளின் முகப்பு

ஆங்கிலம் | சிங்களம் | தமிழ்

இன்றே CTS நூலகத்தில் அங்கத்தவராக இணைந்துகொள்ளுங்கள்!

மேலதிக விபரங்களுக்கு:

+ 94 112 890809 | library@cts.lk

**CTS நூலகம் அனைத்து திருச்சபைகளுக்கும் திறந்துள்ளது**

# கிறிஸ்துவில் ஐக்கிய வாழ்வு

















189 துட்டுகெமுணு வீதி, கொஹுவலை
(+94) 11 2890809 | student.services@cts.lk | www.cts.lk